# பல்சமயச் சிந்தனை

காலம் : 1984-10-30 செவ்வாய் மாலை 6 மணி
இடம் : தூய சின்னப்பர் இறையியல் கல்லூரி (St. Paul's Seminary)
ஏற்பாடு : பல்சமய உரையாடற் குழு
பொருள் : **சமயங்களால் சமூகத்தில் ஏற்பட்டுள்ள சாதக பாதகங்கள்**
உரையாளர் : **கே.எம்.எச். அபூ அப்தில்லாஹ் (எ) ஷாஹுல் ஹமீது**
*பொதுச்செயலாளர்,*
*எலக்ட்ரிக், எலக்ட்ரோனிக் & என்ஜினியரிங் வியாபாரிகள் சங்கம், திருச்சிராப்பள்ளி*

**அவைத் தலைவர் அவர்களே!**

**ஆற்றல்மிகு அறிஞர் பெருமக்களே!**

நீங்கள் அனைவரும் என் சகோதரர்கள். இந்த அடிப்படையில் நானும், நீங்களும் நம்பிக்கை வைத்திருக்கும் அந்த ஒரே இறைவன், நமக்காகக் கொடுத்திருக்கும் நேரான, சரியான, தெளிவான, மார்க்கத்தைக் காட்டியருள அவனை மன, மெய், மொழிகளால் பிரார்த்தித்து எனது உரையைத் தொடங்குகின்றேன்.

இங்கு இறைவனை மறுக்கும் நாஸ்திகர்களோ இறைவனோ மறுமையோ இல்லை. இவ்வாறு சமூகத்தில் ஒழுக்கம் கட்டுப்பாடு நிலைக்க நம் முன்னோர்கள் சொல்லி வைத்தார்கள் என்று சொல்பவர்களும் இல்லை. அமர்ந்திருப்பவர்கள் அனைவரும் இறைவனையும், மறுமையையும் முழுமையாக நம்பி செயல் படுபவர்கள் என்ற நம்பிக்கையோடு, நாஸ்திகர்களுக்குரிய விளக்கத்தை விட்டு, ஆஸ்திகர்களுக் குரியதையே பேசுவேன்.

**மக்கள் அனைவரும் சகோதரர்களே!**

இது உங்களுக்கு வியப்பைத் தராது. நம் தலைமுறைகளைப் பின்நோக்கிக் கணக்கிட்டால், ஒருவர் நம் அனைவருக்கும் தந்தையாக இருப்பார். எனவே நம் சகோதரத்துவ ஒற்றுமை என்றும் நிலைக்குமாக.

## மூன்று முக்கிய சிந்தனைகள்

எனது உரையைத் தொடங்கும் முன் மூன்று செய்திகளை உங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகின்றேன்.

### 1. உலக வாழ்வில் ஒரே முயற்சியில் வெற்றி பெற வேண்டும்

இவ்வுலகில் படிப்பு, பதவி, வியாபாரம், விவசாயம், வழக்கு இவற்றில் நம் கவனக் குறைவால், அறியாமையால் தோல்வியோ, இழப்போ ஏற்பட்டால், அவற்றைப் படிப்பினையாக வைத்து, இரண்டாவது முறையோ பல முறைகளோ முயற்சி செய்து, தோல்வியை வெற்றியாக மாற்றலாம். இழப்பை இலாபமாக ஆக்கலாம். சந்தர்ப்பங்கள் பல உண்டு. ஆனால் நாம் நம்பும் மறுமையைப் பொறுத்தமட்டில், இரண்டாவது சந்தர்ப்பமே இல்லை. ஒரே முயற்சியில் வெற்றி பெற்றேயாக வேண்டும். இல்லை என்றால், மாற்ற முடியாத, மீட்க முடியாத, இழப்பாக அது நம்மை நரகில் கொண்டு சேர்த்துவிடும். இதை மனத்தில் பதித்துக் கொள்ள வேண்டும்.

### 2. கேள்விக்குரிய விடையாக இல்லை என்றால்?

இறைவன் நம்மிடம் எதை ஏவி இருக்கிறானோ அதை மட்டுமே நாம் செய்யவேண்டும். நம் முன்னோர்கள் செய்தது என்பதற்காக ஒன்றைச் செய்து, அதைக் கொண்டு மோட்சம் அடையலாம் என்று மனப்பால் குடிக்கக் கூடாது. தேர்வில் மாணவன் கேட்கப்பட்ட கேள்விக்கு அரை குறையாக எழுதினாலும் மதிப்பெண் உண்டு. கேட்கப்படாத கேள்விக்கு அது பாடத் திட்டத்தில் இருந்தாலும், 100க்கு 100 கிடைக்கும் அளவுக்குத் திறமையாக எழுதினாலும், கிடைப்பது பூஜ்யமே. இறைவனால் ஏவப்படாததைச் செய்வதால், சுவர்க்கம் கிடைக்காது. இதையும் மனத்தில் பதித்துக் கொள்ள வேண்டும்.

### 3. மார்க்க விஷயத்தில் முன்னோர்களைப் பின்பற்றுவது அறிவுடைமையா?

முன்னோர்களின், அறிஞர்களின் இவ்வுலக அனுபவம் ஆற்றல் எல்லாம் நமக்குப் பயன்படலாம். காரணம் அனுபவம்,

ஆற்றலை இலாப, நஷ்டமாக உலகிலேயே சந்தித்து அடைகிறார்கள்; கண்கூடாகப் பார்க்கிறார்கள். மறுமையை அடைந்து இலாப, நஷ்டத்தைப் பார்த்தவர்கள் இல்லை. மறுமை விஷயத்தில் மனிதனின் ஆற்றல், அறிவு செல்லாது. இதில் இறைவன் எதைச் சொல்கிறானோ, அதை ஏற்று அப்படியே செயல்படுவதே அறிவுடமை யாகும். ஆகவே மார்க்கத்தைக் கடைப்பிடிப்பதில், மனிதன் தன் அறிவு, ஆற்றல், அனுபவம் இவற்றை நம்பி செயல்படவும் கூடாது; மற்றவர்களுக்கு அதைப் போதிக்கவும் கூடாது; மற்றவர்கள் அவர்களின் போதனையை ஏற்றுக் கொள்ளவும் கூடாது. முன்னோர்களைப் பின்பற்றுவது விஞ்ஞான அடிப்படையில் முன்னேற்றத்தைத் தரலாம். மார்க்க விஷயத்தில் பின்னேற்றத்தையும், தோல்வியையும் அது தரும்.

அடுத்து, எனக்குக் கொடுக்கப் பட்டுள்ள, '**மதங்களால் சமூகத்தில் ஏற்பட்டுள்ள சாதக பாதகங்கள்**' என்ற தலைப்பில் பேச முற்படுகிறேன்.

## மதம் என்றால் என்ன?

மதம் என்றால் வெறி, சம்மதம் என்ற அடிப்படையில், மனிதன் அவனாகச் சம்மதித்துச் சரி கண்டு ஏற்றுக்கொண்ட ஒரு வழி என்றே சொல்ல முடியும். சுருங்கச் சொன்னால், மனிதனை மதம் மதங்கொள்ளச் செய்வது; இறைவனால் கொடுக்கப்பட்டதன்று. இறைவனால் கொடுக்கப்பட்ட மார்க்கம் மனிதன் சம்மதித்தாலும் சம்மதிக்காவிட்டாலும், சரி கண்டாலும், சரி காணாவிட்டாலும் ஏற்று நடக்க வேண்டியது ஆகும். இறைவனே பல மதங்களைக் கொடுத்திருந்தால், அவனை எப்படி இறைவனாக நாம் ஏற்றுக் கொள்ள முடியும்? இறைவனால் கொடுக்கப்பட்ட மார்க்கம், மனிதச் சமுதாயமே, நலமாக, அமைதியாக வாழும் வழியாகும். மனிதர்களால் சுயநல நோக்கோடு சுவீகரிக்கப்பட்ட மதங்களோ சில, பல சடங்குகளைக் கொண்டு, மோட்சத்தை அடையலாம் என்ற மூட நம்பிக்கையை, குருட்டு நம்பிக்கையை ஊட்டுபவையாகும். உதாரணமாக, ஆதி பிதா ஆதத்தையும், அவரது மனைவியையும் படைத்துச் சுவர்க்கத்தில் வாழ ஒரு மார்க்கத்தைக் கொடுத்தான் இறைவன். இது இறை தொடர்பானதாகும். சாத்தானின் தூண்டுதலினால் ஆதம் தன் சுய விருப்பத்திற்கு ஒரு வழியைத் தேர்ந்தெடுத்தார். இது ஆதத்தின் சம்மதமாகும்; மதமாகும். ஆதம் கொண்ட

மதம், இறைவனுக்குச் சினத்தை உண்டாக்கிச் சுவர்க்கத் திலிருந்து அவரை இவ்வுலகிற்கு விரட்டியது.

இங்கும் அவருக்கும், அவரது சந்ததியினருக்கும் ஒரு மார்க்கத்தை இறைவன் கொடுத்தான்; இறைவன் கொடுத்த மார்க்கப்படி நடப்பவர், இறை சம்மதத்துடன் மீண்டும் சுவர்க்கம் புகுவர் என்றும் அறிவித்தான். இறை மார்க்கம் ஆதத்தின் மக்களில் முன்னைய சூலில் பிறந்த ஆண், பின்னைய சூலில் பிறந்த பெண்ணை மணமுடிக்க வேண்டும் என்பதாகும். ஆதத்தின் மகன் காபிலோ தன் கூடப்பிறந்த சகோதரியையே மணமுடிக்க ஆசித்தான். இது காபிலின் சம்மதம்; மதமாகும், காபில் கொண்ட மதம், அவனது சகோதரன் ஹாபிலின் கொலையில் முடிந்தது. இவ்வாறு இறைவன் கொடுத்த மார்க்கத்தை விட்டு, மனிதன் தன் சுய விருப்பத்தால், மனித அபிப்பிராயத்தால் ஒரு வழியை உண்டாக்கும் போது அது மதமாகி, மனிதனை அழிவுப் பாதைக்கு இட்டுச் செல்கிறது. ஆகவே மதங்கள் இறைவனால் கொடுக்கப்பட்டவை அல்ல என்பது விளங்கும். மனிதர் களால் கற்பனையாகச் சுயநல நோக்கோடு சுவீகரிக்கப் பட்டவை அவை என்பதைப் புரிந்து கொண்டிருப்பீர்கள்.

இப்போது உங்களுக்கு, 'அனைத்து மதங்களும் நன்மையைத்தானே ஏவுகின்றன. தீமையை ஏவ வில்லையே? அவற்றைத் தவறானவை என்று எப்படிச் சொல்ல முடியும்?' என்ற சந்தேகம் உண்டாகலாம். நன்மை, தீமைக்கு இலக்கணம் வகுக்கும் உரிமை இறைவனுக்கு மட்டுமே உண்டு; மனிதனுக்கு இல்லை என்பதை முதலில் உணர வேண்டும். தேர்வு எழுதும் மாணவனிடமே, கேள்வித்தாள் தயாரிக்கும் உரிமையைக் கொடுத்தால், குற்றவாளிக்கே தீர்ப்பு அளிக்கும் உரிமை கொடுத்தால் எவ்வகைக் கேடுகள் விளையுமோ, அவற்றைவிடப் பெருங்கேடுகள் இதனால் விளையும்.

## கள்ள நோட்டு செல்லாத நோட்டு

100 ரூபாய் நோட்டைப் போலவே, எவ்வித வேறுபாடும் இல்லாமல், ஒருவன் ஒரு 100 ரூபாய் நோட் டைத் தயார் செய்தால் அதை நாம் சரி காண மாட் டோம். அதைக் கள்ள நோட்டு என்றே சொல்லித் தயார்

செய்தவனை அரசாங்கம் தண்டிக்கும். அது நல்ல நோட்டைப் போல்தானே இருக்கிறது என்று எவரும் வாதிட முடியாது.

அளவைகளுக்கு வியாபாரிகள் முத்திரை இட்டுக் கொள்ள வேண்டும். இது அரசாங்க ஆணை; காரணம் வியாபாரிகள் மக்களை ஏமாற்றிவிடக் கூடாது என்பதே ஆகும்; ஒரு வியாபாரி, நான் எடைகளைச் சரியாக வைத்திருக்கிறேன். யாரும் பரிசோதித்துக் கொள்ளலாம்; நான் முத்திரையிட்டுக் கொள்ள மாட்டேன் என்றால், அரசு ஏற்குமா? நோக்கம் நிறைவேறினாலும், அரசின் ஒப்புதல் இல்லை என்பதால் தண்டிக்கப்படுவான். நாம் அமைத்த அரசுக்கே இந்த அளவு அடங்கி நடக்க வேண்டும் என்றால், இறைவனுக்கும் இறை ஆட்சிக்கும், எந்த அளவு அஞ்சிக் கட்டுப்பட்டு நடப்பது நம் கடமை என்பதை, நீங்களே யூகித்துக் கொள்ளலாம். ஆக இறை சம்மதம் இல்லாத எந்தச் செயலும், அது நல்லதாக இருந்தாலும், அது மார்க்கமாக முடியாது; அதுவே மதமாகும்.

கள்ள நோட்டைப் போல் செல்லாத நோட்டைப் பற்றியும் சிறிது சிந்தியுங்கள். ஒரு காலத்தில் அரசால் வெளியிடப்பட்டதுதான். அன்றைய மக்கள் அதைக் கொண்டு தாம் விரும்பும் பொருள்களை வாங்கவே செய்தார்கள். ஆனால் அது, எந்த நாளில் அரசால் செல்லாது என்று அறிவிக்கப்பட்டதோ, அன்றிலிருந்து அதற்கும் கள்ள நோட்டிற்குரிய கதியே ஏற்பட்டு விடுகின்றது. அரசால் அது வெளியிடப்பட்டது தானே? புதிய நோட்டிற்கும் அதற்கும் எல்லா வகையிலும் ஒற்றுமைகள் இருக்கின்றனவே என்று யாரும் வாதிடமுடியாது.

இன்று மக்களுக்கு மத்தியில் இருக்கும் மதங்கள் அனைத்தும் கள்ள நோட்டு, செல்லாத நோட்டு. செல்லாத நோட்டிலும், நல்ல நோட்டிலும் மனிதன் தன் விருப்பத்திற்குக் கண்டபடி கிறுக்கி வைத்துள்ள நோட்டுக்கள் போன்றே காணப்படுகின்றன. இறைவனால் இறுதியாகக் கொடுக்கப்பட்ட மார்க்கம் மட்டுமே அரசால் வெளியிடப்பட்டு மனிதனால் கிறுக்கப்படாது, புழக்கத்தில் இருக்கும் நோட்டைப் போன்றதாகும்.

## ஆதி மனிதர் ஆதம்(அலை) முதல் முஹம்மது(ஸல்) வரை ஒரே மார்க்கம்

ஆதி பிதா ஆதம்(அலை) முதல் மோஸஸ்(அலை) தாவீது(அலை) ஜீஸஸ்(அலை) முஹம்மது(ஸல்) வரை பல்லாயிரம் இறைத் தூதர்களும் மக்களுக்குப் போதித்தது ஒரே மார்க்கத்தையே ஆகும். ஆதம்(அலை) குழந்தைப் பிராய மார்க்கத்தையும், ஆப்ரஹாம்(அலை) சிறு பிராய மார்க்கத்தையும் மோஸஸ்(அலை) வாலிபப் பருவ மார்க்கத்தையும் ஜீஸஸ்(அலை) பூரணத்தை நெருங்கிக் கொண்டிருந்த மார்க்கத்தையும், இறுதியாக முஹம்மது(ஸல்) சம்பூரணமாக நிறைவு பெற்ற மார்க்கத்தையும் போதித்தார்கள் என்று நாம் விளங்கிக் கொள்வதற்காகச் சொல்லிக் கொள்ளலாம். முதல் தூதர் ஆதம்(அலை) அவர்களுக்கே நிறைவைப் பெற்ற மார்க்கத்தைக் கொடுத்து, அடுத்து வந்த அனைத்துத் தூதர்களும் அதையே போதித்திருந்தால், இத்தனை மதங்கள் தோன்றியிருக்காதே என்று வினவலாம். பிறந்த குழந்தைக்குப் பால் மட்டும் தேவைப்படுகின்றது. வளர வளரத்தானே தேவைகளும் அதிகரிக்கின்றன. 21 வயதில் வளர்ச்சி நிறைந்தவுடன், தேவைகளும் நிறைவாகி, வாழும் வரை அதுவே நிலைத்திருப்பதைப் பார்க்கிறோம்.

சகோதரியை மணமுடிக்கக் கூடாது என்ற சட்டம் ஆதம்(அலை)அவர்களுக்குக் கொடுக்கப்பட் டிருந்தால், அது சாத்தியப்பட் டிருக்குமா? சகோதரியை மண முடிக்கலாம் என்று ஆதம்(அலை) அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட சட்டம், சகோதரியை அல்ல, சகோதரி மகளை மணமுடிக்கலாம் என்று அடுத்த இறைத் தூதருக்குக் கொடுக்கப்பட்ட சட்டம் மூலம் மாற்றப்பட்டுள்ளது. இப்பழக்கத்தை இன்றும் நாம் இந்துச் சகோதரர்களிடம் பார்க்கிறோம். இவ்வாறு மனித வளர்ச்சிக்கு ஏற்ப சட்டங்கள் மாற்றப்பட்டுத், தன் இறுதித் தூதர் மூலம் மார்க்கத்தை இறைவன் நிறைவு செய்திருக்கிறான்.

இதை, இறைவனது இறுதி நெறிநூலில் காணப்படும், **“இன்றைய தினம் மார்க்கத்தைச் சம்பூரணமாக்கி, எனது அருட்கொடைகளை நிறைவு செய்து, இஸ்லாத்தை மார்க்கமாகச் சம்மதம் கொண்டேன்”; “இறைவனிடம் ஒப்புதல் பெற்ற மார்க்கம் இஸ்லாம்தான்!” “இஸ்லாம் அல்லாததை ஒருவன் கொண்டு வந்தால், அது அவனிடமிருந்து ஏற்றுக் கொள்ளப் படமாட்டாது; மறுமையில் அவன் நஷ்டமடைவான்”** (தனக்கு)

சந்ததியை எடுத்துக் கொள்ளாதவனும், (தன்) ஆட்சியில் தனக்குக் கூட்டாளி எவரும் இல்லாதவனும், எவ்விதப் பலகீனத்தைக் கொண்டு எந்த உதவியாளனின் (தேவை) இல்லாமலும் இருக்கிறானே அந்த இறைவனுக்கே புகழ் அனைத்தும் என்று நீர் கூறுவீராக இன்னும் (அவனை பெருமைப் படுத்த வேண்டிய முறையில் பெருமைப் படுத்துவீராக. (17:111) போன்ற இறைவசனங்கள் உண்மைப் படுத்துகின்றன. முன்னைய எந்த நெறிநூலிலும் இப்படிப்பட்ட இறைவசனங்கள் இல்லை. மாறாக “மார்க்கத்தை நிறைவு செய்யப் பின்னர் ஒரு தூதர் வருவார், வருவார்” என்ற முன் அறிவிப்பே காணக் கிடைக்கின்றன. “இன்றைய தினம் மார்க்கத்தை..... என்ற இறைவசனம் இறக்கப்பட்டவுடன் யூதத்தலைவர்களில் முக்கியமான ஒருவர், இறுதித் தூதரின் தோழர்களிடம், “இந்த வசனம், எங்களது தூதர் மோஸஸ்(அலை) அவர்களுக்கு இறக்கப்பட்டிருந்தால், அந்த நாளைப் பெருநாளாகக் கொண்டாடி வருவோம்” என்று சொன்னது, இங்கு நாம் நன்கு சிந்தித்து விளங்கிக் கொள்ள வேண்டிய ஒரு செய்தியாகும்.

முன்னைய இறைத் தூதர்கள் ஒரு குறிப்பிட்ட நாட்டு மக்களுக்கு என்றும், இன மக்களுக்கு என்றும், குடும்ப மக்களுக்கு என்றும் அனுப்பப்பட் டுள்ளார்கள். ஆனால் இறுதித் தூதரோ அனைத்துலக மக்களுக்கும், வழிகாட்டியாக, இறைத் தூதராக இறைவனால் அனுப்பப்பட் டுள்ளார்கள்(21:107). முன்னைய நெறிநூல்களில் இதற்குரிய சான்றுகள் கிடைக்கின்றன.

## இறைத் தூதர்கள் அவதாரமாக முடியுமா?

இன்று பல மக்களிடம் இருந்து வரும் ஒரு நம்பிக்கையை ஆராய்வோம். இறைத்தூதர்கள் அந்த மக்களால் இறை அவதாரங்களாக ஆக்கப்பட்டிருக்கிறார்கள். இறைவன் மக்களுக்கு வழிகாட்ட அவதாரம் எடுத்ததாக அவர்கள் கூறுகிறார்கள்; இறைத்தூதர்களை அவதாரமாகவோ, மகனாகவோ கூறுகிறார்கள். நன்கு சிந்தித்துப் பார்த்தால், இறைவனது மாற்ற முடியாத தனித்தன்மைக்கு இது மாசு கற்பிப்பதாகும். இதை இறைவன் தன் இறுதி நெறிநூலில் மிக வன்மையாகக் கண்டிக்கிறான். (2:116, 6:100, 10:68, 16:62, 17:111, 19:88, 23:91, 25:2, 37:149, 39:4, 112:1-4).இவ்வாறு சொல்பவர்கள், “இறைவன்

**ஆற்றல் அற்றவன்"** என்று சொல்லாமல் சொல்கிறார்கள், என்பதை விளங்கிக் கொள்ள வேண்டும். அனைத்து ஆற்றலும் நிறைவாக உள்ளவனே இறைவன் என்பது நேர்வழி நடப்பவனின் நீங்காத உறுதியான நம்பிக்கை ஆகும். தூதர்கள் மூலம் இறைவனுக்குச் சாதிக்க முடியவில்லை. அதனாலே இறைவன் அவதாரம் எடுத்து வந்தான் என்றே தவறாகச் சொல்ல முடியும்.

தனது அலுவலக அறையில் இருந்து கொண்டே மற்ற நாடுகளின் ஜனாதிபதிகள், பிரதம மந்திரிகள் அனைவரையும் சந்தித்துப்பேசிப் பல பெருஞ்செயல்களை முடிக்கத் தனது மந்திரிகளையும், பிரதிநிதிகளையும் அனுப்பிச் செய்து முடிப்பவர் அமெரிக்க ஜனாதிபதி ரீகன். அவர் கேவலம் மல அறைக்குத் தானே சென்று அந்தக் கேவலமான காரியத்தைத் தானே செய்து முடிக்கிறார். இது அவரது இயலாமையால் ஏற்பட்ட விளைவாகும். முடியுமானால் அதற்கும் நிச்சயம் பிரதிநிதியை அனுப்பிச் செய்து முடித்திருப்பார். அவர் தானே ஒரு செயலைச் செய்ய வேண்டுமென்றால், அதற்குப் பின்னே ஒரு இயலாமை அல்லது தனக்கு மேல் உள்ள ஒரு சக்திக்குக் கட்டுப்படும் நிலை இருந்தே ஆக வேண்டும். இது இறைவனுக்குப் பொருந்துமா? சிந்தித்துப் பாருங்கள். எந்த வகையிலும் இறைவனுக்குப் பொருந்தாது. இந்த நிலை இருந்தால், அவன் இறைவனாக இருக்க முடியாது. மூப்பையும், இறப்பையும் எதிர் பார்க்கும் மனிதன் சந்ததியை விரும்புகின்றான். சந்ததியைக் கற்பிக்கும் அவர்கள் இறைவனுக்கும் மூப்பும், இறப்பும் உண்டு என்று நினைக்கிறார்களா? ஒரு போதும் இல்லை. இவை அனைத்தையும் கடந்து இறைவன் பெருந் தூய்மையானவன்.

அடுத்து, இறைவன் அவதாரம் எடுத்து உலகில் வந்து வாழ்ந்து காட்டினால், அது போல் மனிதன் வாழ முடியுமா? அப்படி மனிதன் வாழ எதிர்பார்ப்பது நியாயந் தானா? வாழாவிட்டால் தண்டிப்பது பெரும் அநீதியல்லவா? பெரும்பாலும் இறைத் தூதர்களைச் செல்வந்தர்களாகவோ, அதிகாரம் உள்ளவர்களாகவோ தேர்ந்தெடுக்காமல், ஏழைகளாகவும், உலகியல் நோக்கில் சாதாரண நிலை யுடையவர்களாகவுமே இறைவன் தேர்ந் தெடுத்தான். மக்கள், தூதர்கள் பெருஞ் செல்வர்களாகவும் ஆட்சி அதிகாரம் பெற்றவர்களாகவும் இருந்திருந்தால், நாங்கள் அவர்களைப்

பின்பற்ற எளிதாக இருந்திருக்கும் என்று சொல்லவும் செய்தார்கள். ஆனால் நாளை மனிதன், 'இறைத் தூதர்கள் வசதி படைத்தவர்களாக இருந்தார்கள். ஆகவே அவர்களால் உன் கட்டளைப்படி நடக்க முடிந்தது. நாங்களோ இல்லாதவர்கள்; எங்களால் எப்படி உனது கட்டளைப்படி நடக்க முடியும்?' என்று வாதம் செய்ய இடம் ஏற்பட்டு விடாதிருக்கவே இறைவன் அவ்வாறு செய்யவில்லை. இப்போது சொல்லுங்கள். இறைவன் அவதாரம் எடுத்து வாழ்ந்து காட்டி, அதைப்போலவே மனிதன் வாழ வேண்டு மென்று எதிர்பார்க்க முடியுமா? மனிதனைப் போல் மலத்தையும், மூத்திரத்தையும், நாற்ற உடலையும் இறைவனும் சுமந்தால், அவன் இறைவனாக இருக்க முடியுமா? ஒருபோதும் இருக்க முடியாது.

## அவன் என்றே இறைவனைச் சொல்லுகின்றேன் ஏன்?

இறைவனை நான் 'அவன்' என்றே சொல்லி வருவது, உங்களுக்கு ஆச்சரியத்தையும், ஆத்திரத்தையும் தரலாம். எஜமானனாகிய இறைவன் தன் அடிமையாகிய மனிதன், தன்னை அவன் என்று சொல்வதைச் சகித்துக் கொள்கிறான். ஆனால் அவதாரமென்றோ, மகன் என்றோ அவனுக்கு இணை சேர்ப்பதையே அவன் சகித்துக் கொள்வது இல்லை. மானமுள்ள ஒரு ஆண் தன் மனைவி தன்னுடைய இடத்தைத் தான் அல்லாத ஒரு ஆணுக்குக் கொடுத்தால், அவன் தன் உயிருக்குயிரான நண்பனாக இருந்தாலும், எந்த அளவிற்கு அவன் மான உணர்வால் கொதிப்பானோ, ஆத்திரப்படுவானோ, ஒரே வெட்டில் இருவரையும் கொலை செய்யத் துணிவானோ அதைவிடப் பன்மடங்கு, மனிதன் தனக்குக் கூட்டாக யாரையும் சேர்த்தால் இறைவன் சினமும், ஆத்திரமும் கொள்கிறான். கூட்டுச் சேர்த்தால் மிகக் கடுமையாகத் தண்டிக்கிறான். பஞ்சமா பாதகங்களை எல்லாம் இறைவன் விரும்பினால் மன்னிப்பான். ஆனால் தனக்கு யாரையும் கூட்டுச் சேர்ப்பதை, இறைவன் மன்னிப்பதே இல்லை. இதை மிகத் தெளிவாக இறைவன் தன் இறுதி நெறிநூலில் குறிப்பிட்டுள்ளான்(4:48,116). அதனாலே 'அவர்' என்று சொன்னால், மனிதனது அறிவில், பன்மைச் சிந்தனை ஏற்பட்டுத்

தனக்குக் கூட்டைக் கற்பித்து விடுவானோ அதனால் மன்னிக்கவே படாத மாபெரும் குற்றத்திற்கு ஆளாகித், தனது தண்டனையை அடைய நேரிடுமோ என்று இறைவன் மனிதன்மேல் இரக்கப்பட்டுத் தன்னை, ‘அவன்’ என்றே அழைக்கும் முறையைத் தன் இறுதித் தூதர் மூலமாகப் போதித்தான். இந்தப் போதனையின் அடிப்படையிலே நான் இறைவனை ‘அவன்’ என்று குறிப்பிடுகின்றேன்.

## சிலை வணக்கம் எப்படி ஏற்பட்டது?

இந்த அவதார மோகந்தான், சிலை வணக்கத்திற்கு அடிகோலியது. அவதாரமாக நினைத்து, இறைத் தூதர்களுக்கும், மஹான்களுக்கும் சிலை வடித்து, மாலை, மரியாதை என்று கண்ணியப் படுத்துவதாகத் தொடங்கியதே காலப் போக்கில், சாமி என்றும், தெய்வம் என்றும், பல தெய்வ வழிபாட்டில் மக்களைச் சிக்க வைத்தது. நீங்கள் அறியத் தோன்றி உயர்ந்த மனிதராகத் திகழ்ந்து, இந்திய நாட்டின் விடுதலைக்காக உழைத்து, மகாத்மா என்று மக்களால் அழைக்கப்பட்டவர் காந்தி. அவர் அவதார மாக்கப்பட்டுச் சிலையாக வடிக்கப்பட்டு அவருக்கு மாலை மரியாதை செய்தது போய், இன்று கோயில் கட்டப்பட்டுத் தெய்வமாக்கப்பட்டு அவருக்கு அர்ச்சனைகள் நடை பெற்று வருவதை நீங்கள் அறிவீர்கள்.

கடவுளைக் கற்பிப்பவன் முட்டாள். சிலைகளை வணங்குபவன் காட்டுமிராண்டி; மதிக்கும் சிலையும் கல்லுதான்; மிதிக்கும் படியும் கல்லுதான். கல்லுக்கு மரியாதை செய்வது அறியாமையின் உச்ச கட்டம்’ என்று பகுத்தறிவு வாதம் பேசிய, நம் பகுத்தறிவுச் சகோதரர் களும், இந்த அறியாமைச் சேற்றில் சிக்கி, இந்தப் போதனைகளைச் செய்த தங்கள் தலைவர்களையே, அதே கல்லைக்கொண்டு சிலையாக வடித்து, மாலை மரியாதைக ளெல்லாம் செய்து, எங்கள் இதய தெய்வம் என்று கூறி வருவதை நீங்கள் கண்கூடாகப் பார்க்கிறீர்கள். தங்களது முக்கிய செயல்களில், முதலில் அந்தச் சிலைகளிடம் சென்று மாலையிட்டு மரியாதை செய்தே, தங்கள் செயல்களைத் தொடங்குகிறார்கள். கேட்டால் மரியாதைக் காகச் செய்கிறோம் என்று சொல்வார்கள். இதுவே வருங்காலத்தில் சாமி வணக்கமாக மாறுகிறது என்பதை இந்தப் பகுத்தறிவாளர்களால் பகுத்தறிய முடியவில்லை. தாங்கள் மதிக்கும் இந்தத் தலைவர்களை விடச்

சிறந்தவர்களாகவும், ஒழுக்க முள்ளவர்களாகவும் சாமி சிலைகளுக்குரியவர்கள் இருந்திருக்கவும் கூடும் அல்லவா? தங்கள் தலைவர்களைச் சிலைகளாக வடித்து, அச்சிலைகளுக்கு மாலை மரியாதைகள் செய்தால், அவற்றைச் சரி என்று கண்டால், அவற்றை அவர்கள் பகுத்தறிவு வாதம் ஏற்றுக் கொண்டால், சாமிகளின் சிலைகளுக்கும் மாலை மரியாதை செய்வதில் என்ன தவறு? அதை ஏன் இவர்கள் அவமதிக்கிறார்கள்? செருப்பால் அடிக்கத் துணிகிறார்கள்? இது சரிதானா? நியாயம்தானா? இது சரியான பகுத்தறிவு வாதந்தானா? சிந்தனை செய்யுங்கள். உண்மையில் அவர்கள் பகுத்தறி வாளர்களாக இருந்தால், தங்கள் தலைவர்களின் சிலைகள் முதல் அனைத்துச் சிலை களையும் அகற்றி, உண்மையான ஒரே இறைவனை யல்லவா மதித்து மரியாதை செய்து வணங்கி நடக்க முற்படவேண்டும். செய்வார்களா? இந்த வழிகேடுகளுக்கு இறுதி நெறி நூலிலும் ஆதாரங்கள் உண்டு. (பார்க்க 71:23,24)

இவ் வேளையில் ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சரின் முதன்மைச் சீடரும், மேதையுமான சுவாமி விவேகானந்தரின் அறிவுரை, 'ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயம்', தீபாவளி இதழில் (பக்கம் 8; அக்டோபர் 1984) வெளியாகி இருப்பதை உங்கள் சிந்தனைக்குக் கொண்டு வருகிறேன்.

இறைவனை வழிபடுவது, அவன் ஒருவனை மட்டுமே வணங்குவது பக்தியாகும். வேறு எந்தப் பொருளையும், தேவர்களையோ, பித்ருக்களையோ வேறு எந்த மனிதனையோ வழிபடுவது பக்தியைச் சேர்ந்தது அன்று. அது பக்தியே அன்று. பல்வேறு தேவதைகளைப் பல வழிகளில் வணங்குவது சடங்குகளோடு கூடிய வழிபாட்டைச் சேர்ந்ததாகும். இந்த வழிபாட்டினால், வழிபடுபவன் மேலான ஓர் இன்பத்தை அடையலாமே தவிர, பக்தியைப் பெறவோ, முக்தி பெறவோ இயலாது. சிந்தித்துத் தெளிவடைய வேண்டும்.

## இறைவனுக்கு மட்டுமே மார்க்கம் சொந்தம்

'இறைவன் ஒருவனே; அவன் கொடுத்த மார்க்கம் ஒன்றே; இறைவன் அளித்ததே சட்டம். மனிதனுக்குச் சட்டம் இயற்றும் உரிமை இல்லை' என்பதையெல்லாம் உணர்ந் திருப்பீர்கள். (பார்க்க 39:3) இன்னொரு உதாரணத்தையும் சொல்லுகிறேன். ரஷ்யன் தயாரிக்கும்

ஒரு கருவியை, அந்த ரஷ்யன் காட்டும் முறைப்படியே இயக்குகிறோம். நாம் சுயமாக ஒரு முறையைத் தேர்ந் தெடுப்பதில்லை. அல்லது அதற்கென்று அமெரிக்கன் முறையை எடுத்துக் கொள்வதுமில்லை. நம்மைப் போன்ற வலுவற்ற மனிதன் தயாரித்த ஒரு கருவியை இயக்க, அவனது வழிகாட்டலே அவசியப்படுகின்றது. நாம் நினைத்த படி இயக்க முடியவில்லை. முயற்சி செய்தால் நாமே அக்கருவியைத் தயாரிக்க முடியும். மனிதனால் தயாரிக்க முடியாத கருவி, இறைவன் ஒருவனால் மட்டுமே ஆக்கப்பட்ட மனிதக் கருவி. இந்த மனிதக் கருவியை இயக்க வலுவற்ற மனிதனே வழி அமைத்தால், அது சரியாக அமையுமா? அமையாது. அதுவே வழிகேடு; அதுவே மதமாகும். அதனாலே மதமதத்த மதங்கள் விட்டு இறைமார்க்கம் தேட முற்படுவோம்.

## எது நெறிநூல்?

‘ஒரே இறைவனை ஏற்று, அவன் கட்டளைகளின்படி நடக்கத்தயார். எது இறைக் கட்டளை என்று எப்படி முடிவு செய்வது?’ என்று நீங்கள் கேட்கலாம். தகுதியான கேள்வி.

இறைவனையும் நெறிநூல்களையும் ஏற்றுக் கொள்ளும் நாம், கடைப் பிடிக்க வேண்டிய நெறிநூல் எது? நீக்கப்பட்ட நெறிநூல்கள் எவை? என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். இறைத் தூதர்கள் அனை வருக்கும், இறைவனிடமிருந்து அறிவிப்புகள் வந்தன. தொடக்கத்தில் அறிவிப்புகள் சிலவாக இருந்ததால், அவை நூலாக அமையவில்லை. மனித வளர்ச்சி பூரணத்துவத்தை நெருங்கும் சமயத்தில் கட்டளைகள் மிகுதியாகி நூல் அமைப்பு ஏற்பட்டது. முதல் நெறிநூல் மோஸஸ்(அலை)க்கு ‘தவ்றாத்’ என்றும், இரண்டாவது நெறிநூல் தாவூது(அலை)க்கு ‘ஜபூர்’ என்றும், மூன்றாவது நெறிநூல் ஜீஸஸ்(அலை)க்கு ‘இன்ஜீல்’ என்றும் இறுதியாக நான்காவது நெறிநூல் முஹம்மது(ஸல்)க்கு ‘குர்ஆன்’ என்றும் இறைவனால் அருளப்பட்டன. இங்கு ஒரு செய்தியை நாம் நன்கு கூர்ந்து ஆராய்ந்து விளங்கிக் கொள்ள வேண்டும். முன்னைய நெறிநூலிலுள்ள ஒரு கட்டளைக்கு மாற்றமாக, அடுத்த நெறிநூலிலுள்ள கட்டளை இருந்தால், முதல் கட்டளை இரண்டாவது கட்டளையால் இறைவனால் மாற்றப்பட்டு விட்டது என்பதைப் புரிந்து கொள்ள

வேண்டும். அரசிலிருந்து முதல் ஆணை வருகின்றது. அடுத்து அதற்கு மாற்றமான ஆணை வந்தால், இரண்டாவதையே செயல்படுத்த வேண்டும். உயர்நீதி மன்றம் அல்லது உச்சநீதிமன்றம் ஒரு வழக்கில் முதலில் ஒரு தீர்ப்பை வழங்கி, அதற்குப் பின்னே இரண்டாவது, ஒரு மாற்றமான தீர்ப்பை வழங்கினால், இரண்டாவது தீர்ப்பே செல்லும். அதை மூன்றாவது ஒரு தீர்ப்பு மாற்றலாம். முதல் தீர்ப்பு மாற்றாது. நாம் அனைவரும் ஒத்து ஏற்றுக் கொள்ளும் ஒரு செய்தி இது. இதே அடிப்படையில் நெறிநூல்களையும் நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும். முன்னைய மார்க்கங்களுக்குச் '**சமயங்கள்**' என்ற பெயரும் உண்டு. அந்தச் சமயத் திற்கு அது கொடுக்கப்பட்டது. அது மாற்றத்திற் குரியது என்பதுவே அதன் பொருளாகும். அதனால்தான் முன்னைய நெறிநூல்களைப் பாதுகாக்கும் பொறுப்பைத் தான் ஏற்றுக் கொண் டுள்ளதாக அந்தந்த நெறிநூல்களில் இறைவன் சொல்லவில்லை.

## முந்தைய நெறிநூல்களில் மனிதன் கைவரிசை

முந்தைய நெறிநூல்களைப் பாதுகாக்கும் பொறுப்பை இறைவனும் ஏற்றுக் கொள்ளவில்லை. தூதர்களும் இறை வெளிப்பாடுகளை மக்களுக்கு அறிவித்தார்களே அல்லாமல் அவற்றை எழுதிப் பாது காக்க வேண்டும் என்று எண்ணவில்லை. இறைத் தூதர் கள் இறை ஆணை இல்லாமல், ஒன்றையும் செய்ய மாட்டார்கள். முந்தைய இறைத் தூதர்களின் காலத்திற்கு நீண்ட இடைவெளிக்குப் பின்னர், ஒரு சிலரால் நெறி நூல்கள் என்று கோவை செய்யப்படும்போது, அவர்கள் அறிந்தோ, அறியாமலோ அவர்களின் சொந்தச் சரக்கும், இறை வெளிப்பாடு என்ற பெயருடன், நெறிநூல்களில் இடம் பெற்றன. இப்படியே மனிதர்களின் கைவரிசைகளும் முந்தைய நெறிநூல்களில் கலந்துவிட்டன.

## இறுதி நெறிநூலின் உண்மையான நிலை

மார்க்கம் முழுமையாக்கப்பட்டு, இறுதியாகக் கொடுக்கப்பட்ட நெறிநூல் ஆனதாலும், உலகம் அழியும் வரை அதுவே இறைவனால் ஏற்கப்பட்ட தாக அது இருப்பதாலும், இறைவன் இறுதி நெறிநூலைத் தானே பாதுகாக்கும்

பொறுப்பை ஏற்றுக்கொண்டு, பாதுகாப்பதற்கென்று ஒரு தனிப் பாட்டையையும் அமைத்துக் கொடுத்தான். இவற்றை இறுதி நெறிநூலில் இறைவன் குறிப்பிட்டும் இருக்கிறான். (பார்க்க 15:9)

இறுதி நெறிநூலிலுள்ள 6236 வசனங்கலும், சுமார் 23 ஆண்டுகளில் ஏறக்குறைய 486 முறைகள், இறைவனால் 'கேப்ரியல்'(ஜிப்ரில்) என்ற வானவர் மூலம், இறுதித் தூதருக்கு அருளப்பட்டது. இறை வெளிப்பாடு வரும் சமயத்தில், இறுதித்தூதரின் நிலையில் பெரும் மாறுதல்கள் ஏற்படும். தோழர்கள் இறை வெளிப்பாடு வருவதைத் தெரிந்து கொள்வார்கள். அதைப் பதிவு செய்வதெற் கென்று நியமிக்கப்பட்டிருந்த தோழர்கள், எழுதுகோல், தோல், எலும்பு இவற்றுடன் தயாராகி விடுவார்கள். இறை வெளிப்பாடு இறுதித் தூதரின் நாவிலிருந்து வெளிப்பட்டவுடன், உடனடியாகப் பதிவு செய்து கொள்வார்கள். பதிவு செய்யப்பட்டவை தூதரிடம் ஓதிக் காட்டப்பட்டுத் தூதரின் ஒப்புதல் பெறப்படும். பல தோழர்கள் அவற்றை மனப்பாடமும் செய்து கொள்வார்கள். இவ்வாறு இறுதி நெறிநூலின் 6236 வசனங்களும், ஏடுகளிலும் மனித உள்ளங்களிலும் உடனுக்குடன் பதிவு செய்யப்பட்டுப் பாதுகாக்கப்பட்டன. இன்றும் இலட்சக் கணக்கான மனித உள்ளங்களில், இந்த 6236 வசனங்களும் பதிவாகி, அவர்கள் 'ஹாபிழ்'களாகத் திகழ்கிறார்கள். அவர்களில் 10 வயதிற் குட்பட்ட ஆயிரக்கணக்கான சிறுவர்களையும் நீங்கள் பார்க்க முடியும். அதனால் இது இறைவனின் ஏற்பாடல்லாமல், வேறு யாருடைய ஏற்பாடாக இருக்க முடியும்? சிந்தித்துப் பாருங்கள். உலகில் வேறு எந்த முந்தைய நெறிநூலோ, பிற நூலோ இவ்வாறு மனப்பாடமிடப் பட்டுள்ளனவா? என்றும் ஆராய்ந்து பாருங்கள்.

## முந்தைய நெறிநூல் மொழிகள், செத்த மொழிகள்

இன்னொரு அதிசயத்தையும் கவனியுங்கள். முந்தைய நெறிநூல்கள் அருளப்பட்ட மொழிகள் அனைத்தும், இன்று செத்த மொழிகளாக ஆகிவிட்டன **(Dead Language);** மக்களால் பேசப்படாத மொழிகளாக ஆகிவிட்டன. நெறிநூல் அருளப்பட்ட மொழி, பேச்சு வழக்கில் இருந்தால்தான், அதிலுள்ள சொற்களுக்குச் சரியான பொருள் அறிய முடியும்.

செத்த மொழியாக இருக்கும்போது, நெறிநூலிலுள்ள சொற்களை ஏட்டில் எழுதிவைத் துள்ளபடி தான் விளங்க வேண்டும்; நம்பவேண்டும். சரி, பிழை பார்க்க முடியாது. முந்தைய நெறிநூல்கள் இறைவனால் நீக்கப் பட்டதுபோல், அவை அருளப்பட்ட மொழிகளும் அழிந்து மக்களின் பேச்சு வழக்கில் இல்லாமல் மறைந்தன. இதுவே அவை நீக்கப்பட்ட நெறிநூல்கள் என்பதற்குச் சரியான தொரு சான்றாகும்.

## இறுதி நெறிநூல் அருளப்பட்ட அரபி மொழி

இறுதி நெறிநூல் அருளப்பட்ட அரபி மொழியைப் பாருங்கள். மிகவும் பழமையான மொழிகளில் ஒன்றாக அது இருந்தாலும், இன்றும் பொலிவுடன் திகழ்கின்றது. இஸ்லாத்தை ஒழிக்க வேண்டும் என்று கங்கணம் கட்டிக்கொண்டு அதற்குரிய முழு முயற்சியில் ஈடுபட்டிருக்கும் ‘இஸ்ரேல்’ நாட்டிலும் அரபியைத் தவிர்க்க முடியவில்லை. அங்கு அரசு மொழியாக அரபியும் அரசோச்சுகின்றது. அரபு நாடுகளில் கிடைக்கும் வேலை வாய்ப்பின் காரணமாக, அனைத்து நாடுகளிலுமுள்ள, முஸ்லிம் அல்லாதார் கூட்டம் கூட்டமாக இன்று அரபி மொழியை விழுந்து, விழுந்து படிக்கிறார்கள். இது யாரும் மறைக்க முடியாத ஓர் உண்மையாகும். ஐ.நா.சபை அங்கீகரித்த மொழிகளில், நெறிநூல்கள் அருளப்பட்ட மொழிகளில் அரபி மொழி மட்டுமே இருக்கிறது. ஆக இறைவனே பொறுப்பேற்றுக் கொண்டு, அவனால் அருளப்பட்ட இறுதி நெறிநூலையும், அதற்குரிய மொழியையும் பாதுகாத்து வருகிறான் என்பதை விளங்கிக் கொண்டிருப்பீர்கள். இறுதி நெறிநூல் இறைவனால் அருளப்பட்ட அதேவிதமாக, ஓர் உச்சரிப்புக் கூட மாற்றப்படாமல், இன்றும் இருக்கின்றது. உலகம் முடியும் வரை அது இருக்கும் என்பதில் யாருக்கும் ஐயம் இருக்க முடியாது.

## குர்ஆன்’ இறைவனின் இறுதி நெறிநூல் என்பதற்குச் சரியான சான்று!

‘குர்ஆன்’ இறுதித் தூதருக்கு இறைவனால் அருளப்பட்டு, இன்றைக்குச் சுமார் 1430 ஆண்டுகள் ஆகின்றன. சிலர் சொல்வது போல், அது இறைவனால் அருளப்படாமல், எழுதப்படிக்கத் தெரியாத இறுதித்

தூதராலோ, வேறு மனிதர்களாலோ உண்டாக்கப்பட் டிருந்தால், அதிலுள்ள ஒரு சவாலை இன்று மனிதர்கள் முறியடித்திருக்க முடியும். இன்றுவரை அது நடக்க வில்லை. “இது இறைவனால் அருளப் பட்டது அன்று என்று சொல்பவர்கள், இதிலுள்ளது போன்ற ஒரு அத்தியாயத்தை, அல்லது சில வசனங்களை அல்லது ஒரே ஒரு வசனத்தையாவது, அறிவுள்ள மனிதர்கள் அனைவரும் சேர்ந்து உண்டாக்கிக் காட்டட்டும் பார்க்கலாம் என்பது இறைவனது சவால், அதனை மனித இனமே ஏற்க முடியாத நிலையில் இன்று வரை இருப்பது ஒன்றே,‘குர்ஆன்’ இறைவனது இறுதி நெறிநூல்தான் என்பதற்குப் போதியதொரு சான்றாகும்.

## அல்குர்ஆன் பற்றி அறிஞர்களின் தீர்ப்பு

16-ஆம் நூற்றாண்டுக்குப் பிறகு, பூமி, சந்திரன், சூரியன் மற்றக் கோள்கள் ஆகியவற்றைப் பற்றிய உண்மையான நிலைகளை ஆராய்ந்து கண்டு பிடித்து எடுத்துச்சொன்ன விஞ்ஞானிகளை, உலகம் எள்ளி நகையாடியது; அவர்களுக்குக் கடுந்துன்பத்தையும் கொடுத்தது. ஆனால் அதற்கும் 10 நூற்றாண்டுகளுக்கு முன்பே அவற்றின் உண்மையான நிலைகளை, அக்கால மக்களும் ஏற்றுக் கொள்ளும் வகையில், ‘**அல்குர்ஆன்**’ அழகாக எடுத்துரைக்கின்றது. இந்த உண்மையைச் சிந்தித்துப் பார்க்கும், பெரும் பெரும் வேற்றுச் சமய அறிஞர்களெல்லாம், இதைப் பெரும் அதிசயம் என்று எடுத்துச் சொல்லி, ‘**அல்குர்ஆன்**’ மனிதனால் படைக்கப்பட் டதன்று; இறைவனால் கொடுக்கப்பட்டதே; அதில் ஐயமே இல்லை’ என்று உறுதிப்படுத்துகிறார்கள்.

## ஒரு பெரிய சந்தேகம்

இவ்விளக்கங்களால் இறைவனும் ஒருவனே; மனித குலமும் ஒன்றே; நெறிநூலும் ஒன்றே; மார்க்கமும் ஒன்றே’ என்பதில் தெளிவு கிடைத்திருக்குமென்று நம்புகிறேன். உங்களில் எல்லாச் சமயங்களையும் ஆராய்ந்த பல அறிஞர்கள் இருப்பீர்கள். அவர்களுக்கு இப்போது ஒரு பெரிய ஐயம் ஏற்பட்டிருக்கும். அதைத் தெளிவாக்குவது எனது தலையாய கடமை ஆகும்.

நீங்கள் சொல்வது போல் இறுதி நெறிநூல்

தெளிவாக இருக்கின்றது. இறுதித் தூதரின் வழி தெளிவாக இருக்கின்றது.

ஆனால் முஸ்லிம்களும் மற்ற மதவாதிகளைப் போல்தானே செயல்படுகிறார்கள். அவர்களது அன்றாடச் செயல்களைப் பார்த்தால், மற்ற மதவாதிகளுக்கும் அவர்களுக்கும் வேறுபாடு தெரிய வில்லையே? மற்ற மதவாதிகள் தங்கள் தூதர்களையும், மகான்களையும், சிலையாக வடித்து நிற்கவைத்து, மாலை மரியாதை செய்து வழிபடுகிறார்கள். முஸ்லிம் மதவாதிகள் தூதர்களை, மகான்களைச் சமாதியாக வடித்துப் படுக்க வைத்து, மாலை மரியாதை செய்து வழிபாடு செய்து வருகிறார்கள். இறைவனைத் தொழும் இடத்திற்கும் பள்ளிவாசல் என்கிறார்கள். சமாதிகளையும் (தர்கா) பள்ளிவாசல் என்கிறார்கள். எல்லாச் செயல்களிலும், மற்ற மதவாதிகளை ஒத்து ஒரு சில வேறுபாடுகளோடு செயல் பட்டு வருகிறார்கள். மற்ற மதவாதிகளிடம் காணப்படும் மூட நம்பிக்கைகளும், சடங்கு சம்பிரதாயங்களும் முஸ்லிம்களிடமும் காணப் படுகின்றன.

முந்தைய மதவாதிகள் தங்களுக்குள் பிரிவினைகளை உண்டாக்கிக் கொண்டு, அவற்றை வைத்துப் பெருமை பேசிச் சண்டையிட்டுக் கொண்டார்கள். முஸ்லிம்களும் ஹனபி, ஷாபி, மாலிக்கி, ஹன்பலி என்ற (மத்ஹபு) மதப்பிரிவுகளின் பெயராலும், காதிரியா, ஷாதுலியா போன்ற பல (தரீக்கா) பிரிவுகளின் பெயராலும், (இன்று பல இயக்க, கழக, அமைப்புகளின் பெயராலும்) பிரிவினைகளை உண்டாக்கிக் கொண்டும், பெருமை பேசிக் கொண்டும், சண்டையிட்டுக் கொள்வதைப் பார்க்கிறோம். ஷீஆ, சுன்னத் ஜமாஅத் என்ற பெயரால் ஆண்டுதோறும் சண்டையிட்டுக் கொண்டு மண்டையை உடைத்து இரத்தம் சிந்துவதைப் பார்க்கிறோம். கடந்த அக்டோபர் மாதம் 1984 முதல் வாரத்தில், வடநாட்டில் பெரும் சண்டை ஏற்பட்டுப் பலர் இறந்ததாகச் செய்திகளில் படித்தோம். ஈரான், ஈராக் போன்ற முஸ்லிம் நாடுகள் பல வருடங்களாகச் சண்டையிட்டுக் கொண்டிருக்கின்றன. இந்த நிலையில் இஸ்லாத்தில் மட்டும் அப்படி என்ன சிறப்பு வந்து விட்டது? எல்லா மதங்களைப் போல அதுவும் ஒரு மதமாகத்தானே காட்சி அளிக்கிறது. இதுதான் அவர்களின் பெரிய சந்தேகம்.

## சந்தேக நிவர்த்தி

நியாயமான சந்தேகம்; தெளிவாக்கப்பட வேண்டியதே. சந்தேகத்தை விளங்கிக் கொண்டால் செய்தி எளிதாகிவிடும். உலக ஆதாயத்திற்காக மனிதர்களால், சுயநல நோக்கோடு ஏற்றுக் கொள்ளப்பட்டவை மதங்கள் என்று பார்த்தோம். மார்க்கத்தைத் திரித்து மதங்களாக ஆக்கும் ஒரு (புரோகிதர்கள்) கூட்டம் உலக ஆரம்பத்திலிருந்தே இருக்கிறார்கள்; உலகம் முடியும் வரை இருப்பார்கள். இக்கூட்டத்தாரால் முந்தைய தூதர்களின் மார்க்கம் மதங்களாக ஆக்கப்பட்டதுபோல், இறுதித் தூதரின் நிறைவு செய்யப்பட்ட மார்க்கமும் மதங்களாக ஆக்கப்படுவதில் என்ன ஆச்சரியம் இருக்க முடியும்? முஸ்லிம் மதவாதிகளிள் கொள்கைகள் பற்றி, நான் தொடக்கத்திலேயே கிறுக்கப்பட்ட புழக்கத்திலுள்ள புதிய நோட்டு என்று குறிப்பிட்டு விளக்கினேன். இறுதி நெறிநூல் உறுதியாக இருக்கும் நிலையில், பல மதப் பிரிவுகளை மதவாதிகள் உண்டாக்கி இருக்கிறார்கள் என்றால், முந்தைய மதவாதிகள் மக்களை எந்த அளவிற்கு வழி கெடுத்திருப்பார்கள்? சிந்திக்க. ஆனால் ஒரு வேறுபாடு. முந்தைய புரோகிதக் கூட்டத்தார் இறைவன் சொன்னதாகவும், இறைத்தூதர்கள் சொன்னதாகவும் சொல்லாததைச் சொல்லி நம்பவைத்தார்கள்; இறைத்தூதர்களைவிட ஒரு படி மேலே சென்று, அவர்களால் செய்ய முடியாததைச் செய்தார்கள். ஆம்! இறைவன் அறிவித்ததை இறைத் தூதர்கள் தவிர்த்து, தங்கள் விருப்பப்படி எதையும் மக்களுக்கு அறிவிக்கவில்லை. அந்தத் துணிவும் அவர்களுக்கு இருக்கவில்லை. இக்கூட்டத்தாரோ அதைத் துணிச்சலுடன் செய்தார்கள். மக்களுக்கும் அவர்கள் சொல்வது சரியா, தவறா என்று பார்ப்பதற்கு **‘உரைகல்’** இருக்கவில்லை. பதிவு செய்யப்பட்ட உண்மையான நெறிநூல் அவர்களிடம் இல்லை. நம்பிச் செயல்பட்டார்கள்; பல பிரிவினர்களாகப் பிரிந்தார்கள். உலக அமைதியைக் கெடுத்தார்கள். ‘ஊர் இரண்டு பட்டால் கூத்தாடிக்குக் கொண்டாட்டம்’ என்று ஒரு பழமொழியைக் கூறுவர். இக்கூட்டத்தார் இதைப் பயன்படுத்தி உலக ஆதாயம் அடைந்தார்கள்; மறுமையை இழந்தார்கள். இது முந்தைய புரோகிதக் கூட்டம். ஆனால் பாதுகாக்கப்பட்ட நெறிநூல் கொடுக்கப்பட்ட பின்னர்த் தோன்றிய இக் கூட்டத்தார், வேறு ஒரு தந்திரத்தைக்

கையாண்டார்கள். காரணம் இறைவன் சொன்னான் என்றோ, இறுதித் தூதர் சொன்னார் என்றோ சொல்ல முடியாது. **'உரைகல்'** இருக்கிறது. அதனால் அவர்கள் அகப்பட்டுக் கொள்வார்கள். ஆகவே இறுதித் தூதருக்குச் சுமார் 150 ஆண்டுகள் கழிந்தபின் தோன்றிய பெரியார்களின் பெயரால், அவர்களை மையமாக வைத்து, அவர்களை அளவு கடந்து புகழ்ந்து, அவர்கள் சொன்னதே மார்க்கம் என்று மக்களை நம்ப வைத்து, அவர்கள் சொல்லாததை எல்லாம் அவர்கள் சொன்னதாகச் சொல்லி மக்களை ஏமாற்றிவருகிறார்கள்.

## கொயபல்ஸ் தத்துவம்

'கொயபல்ஸ் தத்துவம்' என்று சொல்வார்கள். இல்லாததை(பொய்யை) திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டிருந்தால், அதை உள்ளதாக (உண்மையாக) மக்கள் நம்பி விடுவார்களாம். இந்த அடிப்படையில், மார்க்கத்தில் இல்லாததை எல்லாம், மார்க்கத்தில் உள்ளதாகத் திரும்பத் திரும்பச் சொல்லிச் சொல்லி மக்களை நம்பவைத்து, சமயங்களைத் தோற்றுவித்தார்கள். சிறிதளவிற்குத் தெரிந்த ஒருவன் இதற்கு ஆதாரமில்லையே என்று கேட் டால், உடனே அவனை, நீ நிரம்பப் படித்து விட்டாயோ? அவர்களை விட இறுதி நெறிநூலையும், தூதரின் வழியையும் தெரிந்து விட்டாயோ என்று அவனை மட் டந்தட்டி, மக்களுக்கு நடுவே அவனைச் செல்லாக் காசாக ஆக்கி விடுவார்கள். ஆனால் இந்த வாதம் இறைவனால் சபிக்கப்பட்ட அபூலஹப், அபூ ஜஹ்ல் ஆகிய வழிகேடர்களின் வாதமே அல்லாமல், நேர்வழி நடந்தவர்களின் வாதம் அன்று என்பதை உணர மாட் டார்கள். இறுதித் தூதரின் சொல்படி, முஸ்லிம் ஆணுக்கும், பெண்ணுக்கும் இறுதி நெறிநூலும், இறுதித் தூதரின் வழி முறைகளுமே அடிப்படை அல்லாமல் வேறு யாருடைய சொல்லும் அடிப்படை இல்லை. இவை இரண்டுக்கும் ஒத்திருந்தால் ஏற்றுக் கொள்ளலாம்; மாறுபட்டால் அஞ்சாது ஒதுங்கி விடலாம். இதுவே மார்க்கம். மனிதன் சொல்படி நடப்பதே மதம் ஆகும்.

## மனிதரில் பிரிவுகள் எப்படித் தோன்றின?

மக்களில் பல பிரிவுகள் ஏற்பட, பொறாமை, மனித விருப்பு வெறுப்பே காரணமாகும் (பார்க்க 2:213).

உதாரணத் திற்கு அண்மைக் கால வரலாற்றைக் கூறுகின்றேன். பவுலால் ஜீஸஸ்(அலை) பெயரைச் சொல்லிக் கிறிஸ்தவ மதம் தோற்றுவிக்கப்பட்டது. கருத்து வேறுபாட்டால், அதிலும் பல பிரிவுகள் ஏற்பட்டன. மார்ட் டின் லூர்தருக்கு ஒரு சில எண்ணங்கள் தோன்றின. அன்று இங்கிலாந்து அரசர், தனக்கு இரண்டாவது திருமணம் முடிக்க அனுமதி மறுத்த போப்பின் மீது கோபம். அதனால் மார்ட்டின் லூர்தரை ஆதரித்தார். புரட்டஸ்டாண்ட் மதம் தோன்றியது; வளர்ந்தது. இப்படிப்பட்ட பின்னணிகளிலேயே பல சமயங்கள், மதங்கள் தோன்றின.

## ஒரே கொள்கை தானா?

ஒரே கொள்கையில் இருப்பதாகச் சொல்லிக் கொள்ளும் அனைவரும் ஒரே கொள்கையிலே இருக்கிறார் களா? என்பது ஒரு வினா. இதற்கொரு உதாரணம் சொல்வேன். தமிழ்நாட்டில் பெரியார் தி.க. என்ற பெயரில் ஒரு இயக்கத்தைத் தோற்றுவித்தார். அவரோடு கருத்து வேறுபட்ட அண்ணா, தி.மு.க.வை உண்டாக்கினார். அதிலிருந்து எம்.ஜி.ஆர். அ.இ.அ.தி.மு.க. ஏற்படுத்தினார். பின்னர் எஸ்.டி.எஸ். அ.தி.மு.க.வைத் தோற்றுவித்தார். இன்னும் எத்தனை தோன்றுமோ? அறியேன். ஆனால் நம் சிந்தனை அதுவன்று. இதில் வியப்பளிக்கும் செய்தி அனைவரும் பெரியார் கொள்கையில் இருப்பதாகச் சொல்லிக் கொள்வதே ஆகும். உண்மையில் இவர்களில் எவராவது ஒருவரே பெரியார் கொள்கையில் இருக்க முடியும். அல்லது அனைவருமே பெரியார் கொள்கைவிட் டுத், தங்கள் தங்கள் கொள்கையில் இருக்கலாம். இதுதான் முடியும். ஆனால் அனைவரும் உறுதியாகப் பெரியார் கொள்கையில் இருக்க முடியாது. இருப்பது உண்மையானால், அனைவரும் ஓர் அணியில்தானே இருக்க முடியும். பல அணிகளில் இருக்க முடியாதே. வேறு கண்கொண்டு பார்க்காதீர்கள். நீங்கள் எளிதாக விளங்கிக் கொள்ள இதை எடுத்துச் சொன்னேனேயல்லா மல், வேறு எந்த நோக்கமுமில்லை. இதுபோலவே இறைத் தூதர்களின் போதனையில் இருப்பதாகச் சொல்லிக் கொண்டு, மதவாதிகள் தங்கள் தங்கள் விருப்பப்படி கொள்கைகளை உண்டாக்கிக்கொண்டு, பல மதங்களைத் தோற்றுவித்தார்கள். சுமார் 50 ஆண்டுகளுக்குள் ஒரே கொள்கையில் இத்தனைப் பிரிவுகள் என்றால், பல நூறு

ஆண்டுகளின் கொள்கையில் எத்தனைப் பிரிவுகள் உண்டாகி இருக்கும் என்பதை நீங்களே கணக்கிட்டுக்கொள்ளுங்கள்.

## இஸ்லாத்தின் பெயரால் பல பிரிவுகள்!

இறுதித் தூதருக்கு முன்னால் இருந்த மக்கள் செய்த அதே தவற்றை இறுதித் தூதரின் மக்களும் செய்யத் தொடங்கினார்கள். மார்க்கத்திற்கு அடிப்படையான இறுதி நெறிநூலையும், இறுதித் தூதரின் போதனைகளையும் கைவிட்டு, பெரியார்களின் பெயர்களைச் சொல்லியே மக்களை வழி கெடுத்தார்கள். அவர்கள் சொல்வதுபோல், இறுதித் தூதரின் மறைவுக்குச் சுமார் 150 ஆண்டுகளுக்குப் பின்னே தோன்றிய நான்கு பெரியார்களின் பெயரால் சொல்லப்படுபவைகளை எல்லாம் மார்க்கத்தில் சேர்த்தால், **'இன்றையதினம் மார்க்கத்தை முழுமையாக்கி, என் அருட்கொடைகளை நிறைவு செய்து, இஸ்லாத்தை மார்க்கமாகச் சம்மதித்தேன்'**(5:3). என்ற இறை வசனத்தை நிராகரிக்க வேண்டியே வரும். அல்லது அந்த நான்கு பெரியார்களுக்கும், இறை வெளிப்பாடு வந்ததாக ஒப்புக்கொள்ள வேண்டி வரும். இவை எல்லாம் ஏற்றுக்கொள்ளக் கூடியவைகளா? அவை மேற்படி கூட்டத்தாரின் கற்பனைகளேயன்றி வேறில்லை. இக்கூட்டத்தாரே இஸ்லாத்தின் பெயரால் பல பிரிவுகளை உண்டாக்கினார்கள்.

உண்மையான இஸ்லாம் மார்க்கம், இறுதித் தூதரின் 40-ஆவது வயதிலிருந்து 63-ஆவது வயதுவரை, இறைவன் தன்னிடமிருந்து மார்க்கமாகக் கொடுத்ததே ஆகும். இறுதித் தூதரின் 40-ஆவது வயதுக்கு முன் இடம் பெற்ற செயல்களே மார்க்கத்தில் சேர்க்கப்படாதபோது, இறுதித் தூதரின் மறைவுக்குப் பிறகு, இறை வெளிப்பாடு முற்றுப் பெற்றதற்குப் பிறகு -அதுவும் 150 ஆண்டுகள் கழித்து மார்க்கத்தில் புதிதாக ஒன்றைச் சேர்க்க முடியுமா? ஒரு காலும் முடியாது. அந்த நான்கு பொரியார்களும், உண்மையில் மார்க்கத்தில் புதிதாக ஒன்றையும் இவர்கள் சொல்வதுபோல் இணைக்கவில்லை. உங்கள் சந்தேகத்திற்குரிய மத்ஹபுகள், தரீக்காக்கள், தஸவ்வுப் என்ற பெயரால் நடக்கும் கோலங்கள், இயக்கங்கள் அனைத்தும், மார்க்கத்தைச் சார்ந்தவை அல்ல. உண்மையில் இறுதித் தூதரின் மறைவுக்குச் சுமார் 400 ஆண்டுகள் கழித்து, அவை ஒரு கூட்டத்தாரால் கற்பனையாக வடிக்கப்பட்ட மதங்க

ளாகும். பெரியார்களின் அடக்க இடங்கள் புதை குழிகளே, அல்லாமல் அவை பள்ளிவாசல்கள் அல்ல. அங்குத் தொழுகைக்கும் இடம் இல்லை. மறுமையின் சிந்தனையையும், மரணத்தின் அச்சத்தையும் மனிதருக்கு உண்டாக்கி, நேர்மையாக ஒழுக்கமாக மனிதனை வாழத்தூண்டும் நோக்கோடு, மக்களின் பொது அடக்க இடங்களுக்குச் செல்ல மார்க்கத்தில் அனுமதி உண்டேயல்லாமல், அந்த இடங்களுக்குச் சென்று (தர்கா) வழிபாடு செய்யவோ, சடங்குகள் செய்யவோ கண்டிப்பாக அனுமதி இல்லை. மாறாக அது வெளிப்படையான வழிகேடாகும்.

## மதங்கள் தோன்ற முக்கிய காரணங்கள்!

இறைத் தொடர்பில்லாது மதங்கள் தோன்ற நான்கு பெருங்காரணங்களைச் சொல்லலாம்.

### 1. மார்க்கத்தை வியாபாரப் பொருளாக்குவது:

உலக ஆதாயம் கருதி, ஒரு சாரார் மார்க்கத்தை வணிகப் பொருளாக ஆக்கினர். மக்களுக்கு மார்க்கத்தைப் போதிக்கிறோம் என்று எழுந்த இந்தக் கூட்டத்தினர், உலக ஆதாயத்தில் குறியாக இருப்பதால், வியாபாரத்தில் மிகுந்த இலாபத்தை எதிர்பார்த்து, அரிசியில் கல்லைக் கலப்பதுபோல். மிளகாய்த்தூளில் செங்கல் பொடியைக் கலப்பதுபோல், இவர்களும் மார்க்கத்தில் கலப்படம் செய்யும்போது, அவை மதங்களாக உருப்பெறுகின்றன. இதனால்தான் உலகில் தோன்றிய அனைத்துத் தூதர்களும் ஒரு விஷயத்தை மிகத் தெளிவாகவும், வெளிப்படையாகவும் அறிவித்தார்கள். அவ்வாறு செய்யும்படி இறைவன் கட்டளை பிறப்பித்தான். அது, “மார்க்கத்தை உங்களுக்குப் போதிப்பதற்காக, எவ்விதக் கூலியையும் கேட்கவில்லை. இதற்குரிய கூலி எங்கள் இறைவனிடமே இருக்கிறது” (பார்க்க 6:90, 10:72, 11:29,51, 25:57, 26:109,127,145,164,180, 34:47, 38:86, 42:83).என்ற அறிவிப்பாகும். மார்க்கத்தை உலக ஆதாயத்திற்காக விற்பது குறித்து, எல்லா நெறிநூல்களும் வன்மையாகக் கண்டிக்கின்றன. குறிப்பாக இறுதி நெறிநூலில் மிக வன்மையாகக் கண்டிக்கப்பட்ட வசனங்கள் பல தெளிவாக இருக்கின்றன. உபாதா இப்னு ஸாமித்(ரழி) என்ற இறுதித் தூதரின் தோழருக்கு, மார்க்கத்தை கற்றுக்

கொடுத்ததற்கு உதவியாக ஒரு வில்லைக்கூட அன்பளிப் பாகப்பெற அனுமதிக்கவில்லை; நபி(ஸல்) நரக நெருப்பு வளையம் உமது கழுத்தில் மாட்டப்பட வேண்டுமென்றால், வில்லைப் பெற்றுக் கொள்ளும் என்று இறுதித்தூதர் எச்சரித்தார்கள்.

மார்க்கத்தைக் கற்றுக்கொண்டவர்கள், கற்றுக் கொடுத்தவர்கள் என்னதான் வறுமையில் உழன்றாலும், அதற்கு மகத்தான கூலி மறுமையில் இருக்கிறதென்று ஊக்கப்படுத்தினார்களேயல்லாமல், பிறரிடமிருந்து அதற்குக் கூலி பெற்றுக்கொள்ளுங்கள் என்று சொன்னதாகச் சான்று இல்லை. இறைத்தூதரின் போதனைக்கு மாறாக, மார்க்கத்தைக் கொண்டு தங்கள் உலகத்தேவைகளை ஒரு சாரார் நிரப்ப முற்பட்டதால், மார்க்கத்தில் கலப்படம் செய்து மதங்களை உண்டாக்கினார்கள். மதங்களை வைத்து வயிறு வளர்ப்பவர்களை, நேரான வழியில் இருப்பதாக நீங்கள் ஒரு போதும் நினைக்க வேண்டாம். அவர்களும் வழி கெட்டு, மக்களுக்கும் கோணல் வழிகளைக் காட்டி நேர் வழியைக் கெடுக்கிறார்கள் (பார்க்க 9:9,34, 31:6)

## அறிஞர்களும் தவறு செய்யக்காரணம்!

இவர்களால் போதிக்கப்பட்ட மதங்களை ஆராய்ந்த மார்க்ஸ், ரஸ்ஸல், லெனின், பெரியார், அண்ணா போன்ற மக்களால் அறிஞர்களாக மதிக்கப்படுகின்றவர்கள்; மதம் அபினி போன்றது; வெறியூட்டக்கூடியது; மக்களை ஏமாற்றிச்சுரண்ட வழி வகுப்பது; மக்களில் ஏற்றத்தாழ்வை உண்டாக்குவது; பொதுவாக உலக அமைதியைக் கெடுப்பது. ஆகவே மதங்களும் தவறுடையவை. மதங்கள் போதிக்கும் கடவுளும் இல்லை, மறுமையும் இல்லை என்ற முடிவுக்கு வந்து, மக்களுக்கு அதைப் போதிக்கத் தொடங்கினார்கள். மனிதர்களால் கற்பனையாக உருவாக்கப்பட்ட மதங்களை ஆராய்ந்தார்களே அல்லாமல், அவற்றிற்குப் பின்னே இருக்கக்கூடிய இறைவனால் கொடுக்கப்பட்ட உண்மையான ஒரே மார்க்கத்தை, இந்த அறிஞர்கள் அறியத் தவறி விட்டார்கள். அதன் விளைவு மதவாதிகள் உலகைக் கெடுத்தது ஒரு பக்கம் என்றும், இந்த அறிஞர்கள் உலகை கெடுத்தது ஒரு பக்கம் என்றும், உலகில் கேடுகள் மலிந்து விட்டன. இன்று உலகில் மலிந்து காணப்படும் லஞ்ச லாவண்யங்களுக்கும், பஞ்சமா பாதகங்களுக்கும் உரித்தான காரண காரியங்களில்,

இவர்களுக்கும் பெரும் பங்குண்டு. இறைவன் இருக்கிறான். மறுமை இருக்கின்றது. கேடு செய்தால் மறுமையில் தண்டனை உண்டு என்று அஞ்சி நடந்த சிலரும், இந்த அறிஞர்களின் போதனையால், மக்களுக்கும், அரசுக்கும் தெரியத்தான் தவறுகள் செய்யக்கூடாது. தெரியாமல் எப்படிப்பட்ட தவறுகளையும் செய்து கொள்ளலாம் என்று துணிந்து தவறுகளில் மூழ்கிவிட்டார்கள். அவர்களைப் பின்பற்றும் இக்கால அறிஞர்கள் சிந்தித்தால் உலகைச் சீர்செய்து, அமைதிகாக்க அவர்களின் பங்கைச் செலுத்த முடியும்.

## 2. உலகில் கிடைக்கும் இலாப, நஷ்டம், இன்பதுன்பம் வைத்து மதங்களை நம்புதல்

மார்க்கத்தை மதங்களாக்கியவர்களின் மாய வலையில், விளக்கில் விழும் விட்டில்களைப்போல், மக்கள் கூட்டம் கூட்டமாக விழுவது மதங்கள் தோன்ற ஒரு காரணமாகும். இம்மக்கள் அறிவில் குறைந்த மக்களே. இவ்வாறு அவர்கள் கண்மூடித்தனமாக விழுவதற்கு மதவாதிகளின் சொல்லை நம்பிச் செயல் படுவதால், தங்கள் உலகச் சிக்கல்கள் தீர்வதுபோல் காணப்படு வதாகும். சிலைக்கு முன்னர், சமாதிக்கு முன்னர், கொடிக்கு முன்னர் சென்று முறையிடுவது மூலம், தங்கள் தேவைகள் நிறைவடைகின்றன என்று அவர்கள் நம்புகிறார்கள். ஆகவே அவற்றில் உண்மை இருப்பதாக உறுதி கொள்கிறார்கள். இது இறைவனின் சோதனை என்பதை அவர்களால் உணர முடியவில்லை. மனிதனுக் குப் பசியைக் கொடுத்து இறைவன் சோதிக்கிறான்.

**திருடுவது தவறா?** கஷ்டப்பட்டு உழைத்துத்தேடிச் சாப்பிட்டாலும் பசி தீரும்; எளிதாகத் திருடிச் சாப்பிட்டாலும் பசிதீரும். திருடிச் சாப்பிட்டாலும் பசி தீர்ந்துவிடுகிறதே, திருடுவது எப்படித் தவறாகும்? என்றோ, மணமுடித்து மனைவியைக் கொண்டு அடையும் அதே இன்பம், விபச்சாரியின் வழியிலும் கிடைக்கிறதே, அது விபச்சாரம் ஆகும் என்று எவறும் சொல்ல முடியுமா? இங்கு நினைப்பதை அடைவதைவிட, எப்படி அடைகிறோம் என்றுதான் பார்க்கிறோம். திருடிச் சாப்பிடுவதால் பசி தீராவிட்டால், விபச்சாரத்தால் இன்பம் கிடைக்காவிட்டால் மனிதன் திருடவோ, விபச்சாரம் செய்யவோ மாட்டான்.

சோதனைக்காக மனிதனை உலகில் படைத்திருக்கிறேன் என்று இறைவன் சொல்கிறான். (பார்க்க 67:2), அப்படி என்றால் ஒவ்வொரு செயலையும் செய்து முடிக்க, இரண்டு வழிகள் உண்டு. ஒன்று நேர்வழி; அது இறைவன் கொடுத்தது. மற்றொன்று குறுக்கு வழி; இது சாத்தான் கொடுத்தது. இறைவழியே இறைவனைத் திருப்திப்படுத்து கின்றது. குறுக்கு வழி சாத்தானைத் திருப்திப்படுத்துகிறது. எப்படியும் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ள முடியும் என்பவன் மனிதனல்லன். அவன் விலங்கு ஆவான். தான் விரும்பியது தனக்குக் கிடைப்பதைவிடத், தான் விரும்பியதை எப்படி அடைந்தோம் என்று சிந்தித்துச் செயல்படுபவனே மனிதன். நாம் விரும்புவதை அடைவதை விட இறை ஆணையை நிறை வேற்றுவதே நமக்கு வெற்றியைத் தரும். இறை ஆணைப்படி நடந்து, நம் விருப்பத்தை அடைவது, நம் நோக்கப்படி நடந்து நம் விருப்பத்தை அடைவதைவிட மிகவும் கடினமானது ஆகும். ஆனால் இந்தக் கடினத்தில்தான் நம் வெற்றி இருக்கிறது. தேர்வில் பார்த்து எழுதுவது எளிது. படித்து விளங்கித் தேர்வு எழுதுவது மிகவும் கடினமானது ஆகும். ஆனால் இந்தக் கடினத்தில்தான் நம் வெற்றி இருக்கிறது. இதை நாம் உணர வேண்டும்.

## அப்போதைய துன்பம் நீங்கினால் வெற்றியா?

அப்போது அப்போது ஏற்படும் துன்பம் நீங்கினால், சிக்கல் தீர்ந்தது; வெற்றி அடைந்துவிட்டோம் என்று நினைக்கிறோம். கயிறு இழுப்புப் போட்டியில், வெற்றிக்காக இரு சாராரும், மிகவும் துன்பப்பட்டு இழுக்க வேண்டியுள்ளது. முடிச்சு ஒரு பக்கம் சென்றுவிட்டால், போட்டி முடிந்தது. இரு சாராருக்கும் அப்போதைக்கு இழுக்கும் துன்பம் தீர்ந்தது. தோற்றவனுக்கும் அப்போதைக்கு இழுக்கும் துன்பம் தீர்ந்ததால், இங்கே வெற்றியடைந்து விட்டதாக எண்ண முடியுமா? இப்படித்தான் இறைவனின் சோதனைகளில் தோற்றுவிடுவதன் காரணமாக சோதனையினால் ஏற்பட்ட துன்பமும் நீங்கி விடுகின்றது. துன்பம் நீங்கி விட்டதால், நாம் வெற்றி அடைந்து விட்டதாகவும், நேரான மார்க்கத் தில் இருப்பதாகவும் எண்ணி ஏமாறுகிறோம். மக்கள் மதங்களில் மூழ்கி இருப்பதற்கு இது ஒரு முக்கியக் காரணமாக இருக்கின்றது.

## ஆவி வருவது உண்மையா?

இதே அடிப்படையில், உயிரோடிருப்பவர்களிடம் இறைத்தூதர்களின், மஹான்களின், இறந்தவர்களின் ஆவி வருகின்றது. ஜின் (ஒரு படைப்பு) வருகின்றது. சாமி வருகின்றது; அவை சொல்வது கொண்டு நம் சிக்கல்கள் தீர்கின்றன என்று நம்பி செயல்படுவதும் ஒரு வழிகேடேயாகும். சாத்தான் இப்படிப்பட்ட சாகஸங்களை எல்லாம் செய்து, நம்மை நம்பவைத்து, ஒரே இறைவனிடம் வைக்க வேண்டிய தூய நம்பிக்கையை அவனது படைப்புக்களிடம் வைத்து, வழி விலகி நரகில் விழுவதைப் பார்த்துக் கைகொட்டிச் சிரித்து மகிழ்கிறான். பாமர மக்கள் சாத்தானின் வலையில் எப்படி எல்லாம் சிக்கிச் சீரழிகிறார்கள் என்று சிந்தித்துப் பாருங்கள். அந்தப் பாமர மக்களை நரகப்படுகுழியிலிருந்து காப்பாற்றும் முயற்சியில் ஈடுபடுவோம் வாருங்கள். (பார்க்க 17:11-25, 8:48, 14:22, 16:63,100, 17:64, 19:83, 20:116-128, 22:3, 26:221-223, 35:6, 36:60, 58:19)

## 3. அறிஞர்களிடம் ஏற்படும் ஏமாற்றம்!

மதங்கள் உண்டாக மூன்றாவது காரணம், அறிஞர்களிடம் ஏற்படும் ஏமாற்றமாகும். இவர்கள் இறைவனை அடைவதாக எண்ணிக்கொண்டு, தூதர்களும், இறுதித் தூதரும் காட்டித் தந்த வழிவிட்டு, அவர்கள் விருப்பத்திற்கு ஒரு வழி உண்டாக்கி, ஏதாவதொரு மந்திரத்தையோ, மந்திரங்களையோ தொடர்ந்து ஜபித்துக் கொண்டிருப்பதால், அவர்களுக்கு ஏற்படும் நிலை, கனவிலும், நனவிலும் ஏற்படும் காட்சி, தோற்றம் இவற்றில் மயங்கி, தாங்கள் மிகவும் பெரியதொரு படித்தரத்தை அடைந்து விட்டதாகவும் வெற்றியடைந்து விட்டதாகவும் அவர்களே முடிவுக்கு வந்து விடுகிறார்கள். இதற்கு அவர்களுக்கு ஆதாரம், அவர்கள் நிலையும், காணும் காட்சியும், தோற்றமுமே அல்லாமல், இறுதி நெறிநூலோ, இறுதித் தூதரின் போதனைகளோ அல்ல. இரங்கத் தக்கவர்கள் அவர்கள். ஒருவன் தனக்கு முன்னே ஒரு கல்லை வைத்துக்கொண்டு, கல்லே கல்லே என்று தொடர்ந்து ஜபித்து வந்தாலும், அவனுக்கும் ஒரு நிலை ஏற்படும்; அவனுக்கும் கனவிலும், நனவிலும் தோற்றங்கள் ஏற்படலாம் என்பதை அறிய மறந்து விட்டார்கள். சூரியக் கதிர்களை, ஒரு குவிலென்ஸ் மூலம் ஓரிடத்தில் சேர்த்தால், கடுஞ் சூடு ஏற்பட்டு, நெருப்புப் பிடித்து எரிவதைப் பார்க்கிறோம்.

## சிதறிய சிந்தனை ஒன்றுபடும் போது!

இதுபோல் ஒரு மனிதன், ஒரு கல்லையோ ஒரு சிலையையோ, ஒரு மகானையோ, வேறெதையோ மையமாக வைத்து, அவனது சிதறும் சிந்தனையை ஒன்று படுத்தினால், இந்த நிலைகளும், தோற்றங்களும், காட்சிகளும் ஏற்படவே செய்யும். அவனிடத்தில் சில, பல அதிசயங்களும் நிகழ்ந்து விடலாம். இதில் வியத்தற் கொன்றுமில்லை. இது அனைத்து மதவாதிகளிடமும் காணப்படும் ஒன்றாகும். இதனால்தான் அவரவர்கள் இருக்கக்கூடிய மதங்களிலேயே உறுதியான நம்பிக்கை யுடன் இருக்கிறார்கள். தங்களது மதம் தங்களுக்கு ஈடேற்றத்தைத் தரும் என்று நம்புகிறார்கள். இதனால் தான் **'எம்மதமும் சம்மதம்'** என்றும் சொல்கிறார்கள். இப்படியெல்லாம், தங்கள் சிந்தனைகளைச் செலுத்து கிறார்களே அல்லாமல், அதில் இறைவன் சம்மதமிருக் கிறதா? அது இறைத்தூதர்களால் காட்டித் தரப்பட்டதா? என்று ஒருபோதும் சிந்தித்துப் பார்ப்பதில்லை. தங்கள் நிலை, காணும் காட்சி, தோற்றங்களுக்கு அவர்கள் முதன்மை கொடுக்கிறார்களே அல்லாமல், இறை ஆணையை நினைப்பதில்லை.

## இறை ஆணை இதுதான்!

இறை ஆணையும், இறுதித் தூதரின் வழிகாட் டலும் இதுதான். எந்தச் சந்தர்ப்பத்திலும் மனிதன் தன்னிலை மறப்பதை மார்க்கம் அனுமதிக்கவில்லை. இறுதித் தூதர் மூலம் இறைவன் கடமையாக்கியுள்ள தொழுகையை உற்றுநோக்கினால், இந்த உண்மை தெளிவாகத் தெரியும். வேறு சிந்தனை இல்லாமல், இறை சிந்தனையில் மட்டும் ஒருவன் மூழ்கி, **"என்னை நினைப்பதற்கே தொழுங்கள்"** என்ற இறைவனால் ஏவப்பட்ட அந்தத் தொழுகையையே, இறைத் தூதர் காட்டித்தந்த முறைப்படி, வெவ்வேறு நிலைகளை அதனதன் இடத்தில் முறையாகச் செய்யத் தவறினால், அவன் வழிகெட்டான் என்பதுதான் உண்மையான உண்மையாகும். அவர்கள் நினைப்பதுபோல் இறை சிந்தனையில் மூழ்கித் தம்மை மறக்கும் நிலை, மார்க்கத்தில் வரவேற்கப்படக் கூடியதாக இருந்தால், தொழுகையை இப்போது தொழுவதுபோல்

இறைவன் கடமையாக்கி இருக்கமாட்டான். ஓர் இடத்தில் அசைவில்லாது உட்கார்ந்து தொழும்படி கட்டளையிட்டிருப்பான். போதை தரும் பொருட்களை உபயோகிப்பதை விட்டும், இசையை மார்க்கம் மிகக் கண்டிப்பாக விலக்கியிருப்பதற்கும் காரணம், மனிதன் போதைப் பொருளால், இசையினால் தன்னிலை மறக்கிறான் என்பதற்கே ஆகும். ஆகவே தன்னிலை மறப்பதை இறுதித் தூதர் இறை ஆணைப்படித் தடுத்திருக்கிறார்கள். முந்தைய தூதர்களும் அதைத் தடுத்திருக்கிறார்கள்.

(பார்க்க 2:219,, 4:43, 5:90,91, 26:221-226)

## சாத்தான் காட்டிய வழி!

இது மனிதன் தன்னிலை மறந்து தறிகெட்டுச் செல்வதற்கும் தானே இறைவன், தானே எல்லாம் என்று சொல்லி நரகப்படு குழியில் விழுவதற்கும் சாத்தான் காட்டிய வழியாகும். இந்த வழிகேட்டில் மூழ்கி, ஜப தபத்தின் மூலம் இந்த நிலையை அடைய முடியாதவர்கள், போதைப்பொருட்களை உட்கொண்டு, அதன் மூலம் அந்த நிலையை அடைந்து விட்டதாகச் சொல்பவர்களும் அவர்களில் இருக்கிறார்கள். அதனால்தான் **'அபின் சுல்தான், கஞ்சா மஸ்தான்'** என்ற பழமொழி ஏற்பட்டுள்ளதுபோலும்.

## காண்பது இறைக் காட்சியா?

அவர்கள் காணும் காட்சி, அவர்கள் எண்ணுவது போல் இறைக் காட்சி அன்று; சாத்தானின் காட்சியாகும். இறைத்தூதர் மோசஸ்(அலை) இறைக் காட்சியைக் காண முடியாமல், வேரோடு மரம் சாய்வது போல் சாய்ந்து, மூர்ச்சித்து விட்டார்கள். தூர்மலை சுக்கு நூறாகச் சிதறியது (பார்க்க 7:143). இறுதித்தூதர் தன்னுடைய **'மிஃராஜ்'** எனும் விண் வெளிப் பயணத்தில், இறைவனை நேரடியாகப் பார்க்கும் சக்தியைப் பெறவில்லை. **'இறுதித் தூதர் இறைவனை நேரடியாகப் பார்த்தனர்'** என்று சொல்பவர்கள், பொய்யே சொன்னார்கள் என்று இறுதித் தூதரது அருமை மனைவி ஆயிஷா(ரழி) அவர்களே உறுதியாகச் சொல்லி, அதற்குச் சான்றாக, **"எவரின் பார்வையும் அவனை அடையாது; அவனோ யாவற்றையும் பார்க்கிறான். அவன் (எவருடைய புலன்களுக்கும் தென்படாத) நுட்பமும் தெளிவும் ஆனவன்; யாவற்றையும்**

**அறிந்தவன்''** (6:103) என்ற இறை வசனத்தையும் தருகிறார்கள். அப்படிப்பட்ட இறைக் காட்சியையா இச்சாதாரண மனிதர்களால் பார்த்துவிட முடியும்? அதுவும் மலத்தையும், சிறுநீறையும், நாற்ற உடலையும் சுமந்து கொண்டிருக்கும் நிலையில், ஒரு போதும் இச்சாதாரண மனிதர்களுக்கு அது முடியாதது.

ஆக இந்த அறிஞர்களின் கூட்டமும் வழி விலகியே சென்று கொண்டிருக்கிறார்கள். அவர்களால்தான், இறைவனால் முழுமையாக்கப்பட்ட இஸ்லாம் மார்க்கத்திலும், **'சமாதி'**(தர்கா) வழிபாடு புகுத்தப்பட்டது. இவர்களால் ஏற்பட்ட இந்த இறைவனுக்கு இணைவைக்கும் இம்மாபெரும் குற்றத்திற்கு, அவர்கள் பதில் சொல்லியே ஆகவேண்டும். இவ்வாறு சொல்வதால், மஹான்களையும், பெரியோர் களையும், இறைநேசர்களையும் அவமதிப்பதாக, குறை கூறுவதாக எவரும் எண்ண வேண்டாம்; தெளிவாகச் சொல்லுகிறேன். இறுதி நெறிநூலையும், இறுதித் தூதரையும் ஏற்று இறைவனால் கொடுக்கப்பட்ட மார்க்கத்தைப் பின்பற்றிய பெரியார்களின், இறைநேசர்களின் காலுக்குச் செருப்பாக நான் தயாராக இருக்கிறேன். அவர்களை அவர்களின் தகுதியால் மதிக்கிறேன். ஆனால் மார்க்கத்தை மதங்களாக்கி, உலகைத் தேடுபவர்களையே இங்குக் குறிப்பிடுகிறேன். மார்க்கத்தில் கூடுதல் குறைவு செய்ய இறை வெளிப் பாடுகளைப் பெற்ற இறைத்தூதர்களுக்கே அதிகாரம் இல்லாதபோது, அதைத் தெளிவாக இறைவன் தன் இறுதி நெறிநூலில் சொல்லிக் காட்டும்போது, வேறு யாருக்கு அதிகாரம் இருக்க முடியும் என்பதைச் சிந்தித்துப் பாருங்கள். (பார்க்க 5:67,, 17:73-75, 69:44-47)

இறுதித்தூதர் தன் சொந்த விருப்பத்தினால், மக்களுக்கு அல்ல, தனக்கு மட்டிலும், தனது மனைவி யரின் மனநிறைவிற்காக, இறைவன் ஆகுமாக்கியதை, ஆகாதென்று சத்தியம் செய்ததில், **'நான் ஆகுமாக் கியதை உமது மனைவிமார்களின் திருப்திக்காக ஆகாதாக்கிக்கொண்டீரா?' என்று இறைவன் கண்டித்து, இறுதித்தூதரின் சத்தியத்தை முறிக்கச் செய்து, அதற்குப் பரிகாரமும் கொடுக்கும்படி கட்டளையிட்டான் (66:1,2).** இறுதித்தூதருக்கே இந்த நிலை ஏற்பட்டது என்றால், மற்றவர்களின் நிலையைக் குறித்து என்ன சொல்ல இருக்கிறது? ஆராய்ந்து, நீங்களே ஒரு முடிவுக்கு

வாருங்கள்.

## 4. பேரறிஞர்களின் ஏமாற்றம்!

இறுதியாக, மதங்கள் ஏற்பட நாலாவது காரணம், அறிவார்த்தமான வாதங்கள், சர்ச்சைகள்; அதனால் பெறப்படும் முடிவுகளை, மார்க்கத்தின் அடிப்படைகளாக்கிக் கொள்ளலாகும். பேரறிஞர்கள், ஆற்றல் மிக்கவர்களை எல்லாம் சாத்தான் இந்த மாயவலையில் சிக்க வைத்திருக்கின்றான். இறைவன் இல்லை, மறுமை இல்லை என்ற நாத்திகமும் இதிலிருந்தே பெறப்படுகின்றது. இங்கு நாத்திகர்கள் இல்லை. அதைப்பற்றிய விளக்கத்தைவிட்டு மேலே தொடர்ந்து பேசுகின்றேன். மனிதனுக்குக் கொடுக்கப் பட்டுள்ள அற்ப அறிவைக்கொண்டு ஆராயும்போது, நன்மை என்று தனக்குப் பட்டால் அவன் அதை எடுத்துக்கொள் கிறான்; தீமை என்றுபட்டால் விட்டுவிடுகிறான். அவனது அறிவின் முடிவையே எல்லையாக்கிக் கொள்கிறான். ஆனால் உண்மையில் மனிதன் சரி என்று காண்பது தவறாகவும், தவறென்று நினைப்பது சரியாகவும் சமயங்களில் அமைந்து விடுகின்றது. இதை இறைவன் தன் இறுதி நெறிநூலில் சுட்டிக்காட்டுகிறான் (பார்க்க 2:216). இதனால்தான் நீதிமன்றங்களில் குற்றவாளிகள் நிரபராதிகளாகச் சில வேளைகளில் முடிவு செய்யப்பட்டு அவர்கள் விடுதலையடைகிறார்கள்; நிரபராதிகள் தண்டிக்கப் படுகிறார்கள். ஒவ்வொரு நாட்டின் அரசியல் சாசனமும், மனிதனால் உருவாக்கப்பட்ட சட்ட திட்டங்களும், காலத்திற்குக் காலம், மாற்றங்களுக்கு உள்ளாகி வருகின்றன. இது மனித அறிவின் இயலாமையை எடுத்துக்காட்டுகின்றது. மனிதன் தன் அறிவுத்திறன் கொண்டு தன்னைப்பெற்றெடுத்த தாயையும், தந்தையையும் அறிய முடியவில்லையே? வேறு எதை அவனால் அறிந்து கொள்ளமுடியும்? அம்மா என்று எழுத்துக்கூட்டி வாசிக்கும் ஒருவன், கம்பராமாயணத்திற்கு விளக்கம் கூற முற்பட்டால்? 2+2 = 4 என்பதை அறியாதவன், $2^{100}$ பற்றிச் சொல்ல முற்பட்டால், 5 கிலோ தராசில் 5000 கிலோ நிறுக்க முற்பட்டால், அரசு சட்டம் போடுவதை விட்டு, மக்களே சட்டத்தைக் கையில் எடுத்துக் கொண்டால் என்ன என்ன விளைவுகள் ஏற்படுமோ அதைவிட விபரீத விளைவுகள், மனிதன் தன் அறிவு கொண்டு மார்க்க விசயத்தில் முடிவுகள் எடுப்பதால் ஏற்படும்; இந்த அடிப்படையில் மரணத்தைத் தவிர்த்து

(இதில் மாற்றுக் கருத்துக்கு வழியில்லை) இறைவன் இருக்கிறானா? இல்லையா? மறுமை உண்டா? இல்லையா? என்பது முதல் அனைத்துச் செய்திகளிலும் விவாதங்கள், சர்ச்சைகள் செய்து, அவற்றில் மனித அறிவால் பெறப்படும் முடிவுகளை எல்லையாகக் கொண்டு எடுத்து நடக்க முற்படுகிறார்கள். மனம் போல் வாழ்வு என்ற அடிப்படையில் எண்ணற்ற மதங்களைத் தோற்றுவிக்கிறார்கள். அளப்பதற்குமுன் அளக்கும் கருவியைச் சரிபார்ப்பது போல், அறிவைப்பயன்படுத்துமுன் அறிவின் அளவைச் சரிபார்க்கத் தவறிவிடுகிறார்கள்.

## மதுவிலும், சூதிலும், நன்மை உண்டா?

இவர்களது அறிவை அழகாக இறைவன் தன் இறுதி நெறிநூலில் சுட்டிக்காட்டுகின்றான். **“மதுவிலும், சூதிலும் நன்மை இருப்பதாக அவர்கள் நினைக்கிறார்கள். அவர்கள் நினைப்பதுபோல் மதுவிலும், சூதிலும் சில நன்மைகள் இருக்கத்தான் செய்கின்றன. நன்மையைவிடத் தீமைகள் அதிகமாக இருப்பதால், (அதைத் தடை செய்கிறேன்”) (2:219)** என்று இறைவன் கூறுகின்றான். தங்கள் அறிவுப்படி மதுவிலும், சூதிலும் நன்மையைக் கண்டவர்கள் அதில் மூழ்கி இருப்பதைப் பார்க்கிறோம். இது அவர்கள் மதம். உலக மக்களால் கெடுதல் என்று கூறப்படும், மதுவிலும், சூதிலும் ஒரு சில நன்மைகள் இருப்பதாக இறைவனே ஒப்புக் கொள்ளும்போது, வேறு எதில் சில நன்மைகளாவது இல்லாமல் இருக்க முடியும்? ஆகவே அறிவு கொண்டு முடிவு செய்தால், கெட்டதை எல்லாம் நல்லதாகவும், நல்லதை எல்லாம் கெட்டதாகவும் முடிவு செய்து செயல்பட நேரிடும். அதனால்தான் மதங்கள் உருவாகின்றன. தன்னைப் படைத்துத் தன்னை ஆட்டிப் படைக்கும் ஒரு சக்தி இருக்கிறது, அவன்தான் இறைவன் என்பதை எப்போது அறிகிறானோ அப்போது தான் மனிதன் அறிந்தவனாக, அறிஞனாக ஆகின்றான். மார்க்கத்தைத் தன் அற்ப அறிவு கொண்டு ஆராய்ந்து அதையே எல்லையாக்காமல், இறைவனது உண்மையான உத்திரவு இதுதானா? என்பதை மட்டும் சரியாக விளங்கிக் கொண்டு அதை மட்டுமே செயல்படுத்தினால், அதற்கு நாம் அனைவரும் தயாராகி விட்டால், மனித மதங்கள்

அனைத்தும் அழிந்து, இறைவனது மார்க்கம் மட்டும் உலகில் நிலை நாட்டப்பட்டு விடும். அந்த நாள் எந்த நாளோ? அது நிகழ்ந்து விட்டால், அதிசயமோ என்று நாமே வியக்கத்தக்க வகையில், நலமும், அமைதியும் உலகில் ஏற்பட்டு விடும்.

## மூதாதையர்களின் அடிச்சுவட்டைப் பின்பற்றுவது மார்க்கமா?

மதத்தின் தொடர்பாகும் சம்பந்தப்பட்ட ஐயங்களுக்கு இங்கே ஓரளவு விளக்கம் கிடைத்திருக்கும் என்று நம்புகிறேன். நீங்கள் சொல்வதெல்லாம் சரிதான். நியாயமாகத்தான் படுகின்றது. ஆனாலும் எங்கள் முன்னோர்கள் எதில் இருக்கக் கண்டோமோ அதில் தான் எங்களுக்குப் பெருமை இருக்கிறது. சொர்க்கத்தில் இருந்தாலும், நரகத்தில் இருந்தாலும் அவர்களோடு இருக்கத்தான் விருப்பப் படுகிறோம் என்று சிலர் சொல்லலாம். அவர்கள் சொல்லில் உண்மை இல்லை. முன்னோர்களின் அடிச்சுவட்டை அப்படியே பின்பற்றக்கூடியவர்கள், அதை இவ்வுலகில் முதலில் செய்து காட்ட வேண்டுமல்லவா? முன்னோர்கள் ஏழைகளாக இருந்திருந்தால், இவர்களும் ஏழைகளாக இருக்க விருப்பப்பட வேண்டுமல்லவா? அவர்கள் அறிவிலிகளாக இருந்தால் இவர்களும் அறிவிலிகளாக இருக்க விருப்பப்பட வேண்டுமல்லவா? அவர்கள் குடிசையில் வாழ்ந்திருந்தால் இவர்களும் குடிசையில் வாழ விருப்பப்பட வேண்டுமல்லவா? கூழைக் குடித்துக் கந்தையைக்கட்டி இருந்தால், இவர்களும் கூழைக் குடித்துக் கந்தையைக் கட்ட விருப்பப்பட வேண்டுமல்லவா? இது உண்மைதானா? இவை எல்லாம் இழிவு; இவற்றை விட்டு விடுதலை பெற வேண்டும் என்றல்லவா, அல்லும் பகலும் பாடுபடுகிறார்கள். அப்படி என்றால் மத அளவில் மட்டும் இவர்கள் முன்னோர்களைப் பின்பற்றுகிறோம் என்று சொல்வது சரியா? இவர்கள் முன்னோர்களைப் பின்பற்றவில்லை. சாத்தானையே பின்பற்றுகிறார்கள்.

ஏழைகளாக இருப்பதைவிட, குடிசையில் வாழ்வதைவிட, கூழைக் குடித்துக் கந்தையைக் கட்டுவதைவிட, இறைவன் கொடுத்த மார்க்கத்தைவிட்டு மனிதன் படைத்த மதங்களைப் பின்பற்றுவதே

மிகப்பெரும் இழிவாகும். அது மிகப்பெரும் இழிவு மாத்திரமன்று; மறுமையில் மாபெரும் இழப்பையும், துன்பத்தையும் தரக்கூடியது அது என்பதை உணர்ந்து கொண்டால், அவர்களால் அவ்வாறு சொல்ல முடியாது. இவ்வுலகின் சாதாரண துன்பங்களை விட்டும் விடுதலை பெறப் பெரும் முயற்சி எடுக்கும் மனிதன், மறுமையின் மாபெரும் துன்பங்களை உணர்ந்திருந்தால், புரிந்திருந்தால் அதை விட்டும் விடுதலைபெற முயற்சி செய்யாமல் இருக்க முடியுமா? சொர்க்கத்திற்குப் போனாலும், நரகத்திற்குப் போனாலும் முன்னோர்களைப் பின்பற்றியே நடப்போம் என்று சொல்ல முடியுமா? அறியாமையின் பேச்சே இது ஆகும். அறிஞனின் வாயிலிருந்து இத்தகு பேச்சு வெளிப்படாது.

மனிதர்களைப் பல வழிகளில் முயற்சி செய்து நரகப் படுகுழியில் சாத்தான் தள்ளுகிறான். முதலில் இறைவனை மறுக்கும் நாத்திகனாக்கப் பார்க்கிறான். அதில் அவன் தோல்வி கண்டால், மனிதன் இறைவனை ஏற்றுக்கொண்டால், இறைவனுக்கு இணை வைத்து அதன் மூலம் நரகில் விழச்செய்கிறான். இதற்காக அவன் பயன்படுத்தும் உபாயம் முன்னோர்களின், அறிஞர்களின் அடிச் சுவட்டைப் பின்பற்றி நடக்க வேண்டும் என்ற ஒரு பக்தி உணர்வை உண்டாக்குவதாகும். இதில் பெரும்பாலோர் சிக்கி விடுகிறார்கள். முன்னைய அறிஞர்களைப் பின்பற்றுகிறோம் என்று சொல்லியே மக்களில் பெரும்பாலோர் வழி கெட்டுப் போகிறார்கள். கடந்த கால வரலாற்றை உற்று நோக்கினால், அபூலஹப், அபூஜஹல் போன்ற வழிகேடர்கள், இறைவனால் சபிக்கப்பட்டவர்கள், இறை தண்டனைக்கு ஆளானவர் கள், இவர்களே நம் முன்னோர்கள், அறிஞர்கள் எல்லாம் முட்டாள்களா? மார்க்கம், தெரியாதவர்களா? நீ புதிதாகச் சொல்ல வந்துவிட்டயே! அவர்களைவிட நீ மிகவும் அறிந்துவிட்டாயோ? அவர்களெல்லாம் வழிதவறியவர் களா? நரகவாதிகளா? என்று அடுக்கிக்கொண்டே போய் மக்களை அவர்கள் வழிகெடுத்திருக்கிறார்கள். அல்லாஹ் வின் பொருத்ததைப் பெற்ற நேர்வழி நடந்தவர்கள் எந்தச் சிக்கல் வந்தாலும், இறைவன் என்ன சொல்லுகிறான், இறைத்தூதர் என்ன சொல்கிறார் என்று மட்டுமே பார்த்திருக்கிறார்கள். இந்த வழிகேடர்களின் குதர்க்கமான

கேள்விக்கு, இறைவனே தனது இறுதி நெறிநூலில் **“அவர்கள் செய்த நல்வினை அவர்களுக்கே; நீங்கள் செய்த நல்வினைதான் உங்களுக்கு. அவர்கள் என்ன செய்து கொண்டிருந்தார்கள் என்று நீங்கள் கேட்கப்பட மாட்டீர்கள்” (2:134,141)** என்று முன்சென்ற நபிமார்களைப் பற்றியே குறிப்பிடுகிறான். நபிமார்களைப் பற்றியே நீங்கள் கவலைப்பட வேண்டாம் என்று இறைவனே சொல்லும் போது, முன்னோர்களையும் முன் சென்ற அறிஞர்களைப் பற்றியும் அவர்கள் ஏன் கவலைப்படுகிறார்கள்? மக்களை வழிகெடுக்கவே, இவ்வாறு கூறுகிறார்கள் என்பது இங்கு விளங்குகிறதல்லவா?

## சாத்தானின் மாயவலை!

முன்னோர்களின், முன் சென்ற அறிஞர்களின் வழி நடக்கிறோம் என்ற சாத்தானின் மாய வலையில் சிக்கித்தான், மக்கள் இறைத்தூதர்களின் போதனையை மறுத்தார்கள். இரண்டு இறைத்தூதர்களுக்கு இடைப்பட்ட கால கட்டத்தில், முன்னைய தூதரின் போதனையிலிருந்து சிறிது, சிறிதாக இக்கூட்டத்தார், சாத்தானின் துணையைக் கொண்டு, மக்களை வழிதவறச் செய்தார்கள்; மக்களோ முன்னைய தூதரின் போதனைப் படிதான் நடக்கிறோம் என்ற நம்பிக்கையோடு அதற்கு நேர் மாற்றமாக நடந்து கொண்டிருப்பார்கள். அடுத்த தூதர் வந்து உண்மையான மார்க்கத்தைப் போதிக்கும்போது, அது அவர்கள் பின்பற்றி நடக்கிற இக்கூட்டத்தாரால் முன்னைய தூதரின் போதனை என்று சொல்லப்பட்டதற்கு நேர் மாற்றமாக இருக்கும். அறிஞர்கள் என்று சொல்லிக்கொள்ளும் இக்கூட்டத்தார் மீது நம்பிக்கை கொண்டுள்ள மக்கள், முன்னைய தூதர் அறியாதவரா? வழி தவறியவரா? என்று கேட்டு, இரண்டாவது இறைத்தூதரின் நற்போதனைகளை மறுத்து விடுவார்கள். காலத்துக்குக் காலம் முன்னைய தூதரைவிடப் பின்னர் வந்தவர் அறிவாளியாகி விட்டாரா? என்ற எண்ணத்திலேயே மக்கள் இறைத்தூதர்களை நிராகரித்து வந்தார்கள். **“அடியார்கள் மீதுள்ள கைசேதமே! அவர்களிடம் எந்தத் தூதர் வந்தபோதிலும் அவர்கள் அவரைப் பரிகாசம் பண்ணாதிருக்கவில்லை.” (36:30)** என்று இறைவன் தன் இறுதி நெறிநூலில் குறிப்பிடுகின்றான். இப்படித்தான் மோஸஸ்(அலை) போதித்த கொள்கையில் இருப்பதாக நம்பிக்கைக் கொண்டு அதற்கு நேர்மாறான கொள்கை

யில் இருந்த யூதர்கள், அவர்களிடம் ஜீஸஸ்(அலை) வந்து, உண்மையான இறை மார்க்கத்தைப் போதித்தபோது, மோஸஸ்(அலை) மீதிருந்த தவறான நம்பிக்கையினால், ஜீஸஸை(அலை) ஏற்றுக்கொள்ளாது நிராகரித்ததோடு, அவரைக் கொலை செய்யும் முயற்சியிலும் ஈடுபட்டார்கள். இறைவன் தன் தூதரைக் காப்பாற்றிக் கொண்டான். அதே போல் ஜீஸஸ்(அலை) போதித்த போதனையில் இருப்பதாக நம்பிக்கொண்டு, அதற்கு நேர்மாற்றமான கொள்கையில் இருந்த கிருத்தவர்கள், அவர்களிடம் முஹம்மது(ஸல்) வந்து இறை மார்க்கத்தைப் போதித்த போது, ஜீஸஸ்(அலை) மீதிருந்த தப்பான நம்பிக்கை யினால், முஹம்மதை(ஸல்) ஏற்றுக் கொள்ளவில்லை. இப்படி எல்லாம் மக்களை வழி கெடுத்தவர்கள், மார்க்கத்தைக் கொண்டு உலகைத் தேடியவர்கள். இவர்களின் துர்ப்போதனை யால், இரண்டு தூதர்களுக் கிடையில் வேறுபட்ட கருத்துப் போல், தோன்றியதால் முன்னைய தூதர் வழிகேடரா? என்ற எண்ணம் மக்களுக்கு ஏற்பட்டது. அதற்கு விளக்கமாகத்தான் 2:134,141 வசனங்களை இறைவன் இறக்கினான்.

இதே அடிப்படையில் இறுதித்தூதர் மறைவுக்குப் பிறகு இதே கூட்டத்தார் மீண்டும், மக்களை இறுதித் தூதரின் உண்மையான போதனைகளிலிருந்து நெடுந்தூரம் அழைத்துச் சென்றுவிட்டார்கள். பெரும்பாலான மக்கள் அதில்தான் மூழ்கி இருக்கிறார்கள். அவர்கள் இருக்கும் தவறான நிலை, இறுதி நெறிநூல் இறுதித் தூதரின் போதனைகளைக்கொண்டு சுட்டிக் காட்டப்பட்டால், தாங்கள் மூழ்கி இருக்கும் கொள்கையிலும், யாரைப் பின்பற்றி அந்தக் கொள்கையில் இருக்கிறார்களோ, அவர்கள் மீதுள்ள தவறான நம்பிக்கையிலும், இறுதி நெறி நூலின் வசனங்களையும், இறுதித் தூதரின் போதனை களையும் நிராகரிக்கிறார்கள். இது உலகம் அழியும்வரை நடைபெற இருக்கும் ஒரு தொடர் கதையாகும்.

ஆத்திகர்களிடம், மதவாதிகளிடம் இந்த முன்னோர், முன்னைய அறிஞர்களின் அடிச்சுவட்டைப் பின்பற்றி நடக்கும் எண்ணம் மிகத் தீவிரமாக இருப்பதால், அதைப்பற்றி இன்னும் சற்று விரிவாகப் பேசவே விருப்பம். உலகில் தோன்றிய பல்லாயிரம் இறைத்தூதர்களையும், மக்கள் எதிர்த்ததற்குக் காரணம், அவர்கள் முன்னோர்கள்

காட்டித்தந்த கொள்கைகள் என்று, கடைபிடித்துக் கொண்டிருந்த கொள்கைகளுக்கு நேர் மாற்றமாக இறைத்தூதர்கள் போதித்ததை அவர்களால் சகிக்க முடியவில்லை. அதனால் அளவு கடந்து ஆத்திரப்பட்டு, இறைத்தூதர்களைக் கொடுமைப் படுத்தினார்கள்; சிலரைக்கொலையும் செய்தார்கள். முன்னோர்கள் நேரான பாதையில் இருந்ததாகக் குருட்டுத்தனமாக நம்பினார்கள். ஆம்? குருட்டுத்தனமாக நம்பிச் செயல்பட்டார்கள் என்று தான் சொல்ல முடியும். அவற்றிற்குரிய ஆதாரங்களைப் பார்த்து அவர்கள் பின்பற்றவில்லை. அப்படி நடப்பவர்கள், அப்படி நடப்பதற்கு, இறைவனிடமிருந்து என்ன ஆதாரத்தைப் பெற்றுள்ளனர்? அந்த ஆதாரத்தைக் கொண்டு வாருங்கள் என்று இறைவனே இறுதி நெறிநூலில் கேட்கின்றான் என்பது ஒரு செய்தி.

**"தெளிவான கட்டளைகளை நாம் அவர்களுக்குக் கொடுத்தோம். அவர்கள் தங்களுக்கிடையிலுள்ள பொறாமையின் காரணமாக, அவர்களிடம் (இறை) ஞானம் வந்த பின்னரும், அவர்கள் (தங்களுக்குள் தர்க்கித்துக் கொண்டு) பிரிந்து விட்டனர். நிச்சயமாக உம் இறைவன் அவர்கள் தர்க்கித்துக் கொண்டிருப்பவற்றைப் பற்றி, மறுமையில் அவர்களுக்கிடையில் தீர்ப்பளிப்பான்."**

*அல்குர்ஆன் 45:17*

**"மார்க்கத்தின் நேரான வழியில்தான் நாம் உம்மை ஆக்கி இருக்கிறோம். ஆகவே அதனையே நீர் பின்பற்றி நடப்பீராக; அறிவற்றவர்களின் விருப்பங்களை நீர் பின்பற்றாதீர்"**(45:18) என்று இறுதித்தூதரையே இறைவன் எச்சரிக்கின்றான்.

இவற்றிலிருந்து எந்த ஒரு சிக்கலுக்கும், இறைநெறிநூல் என்ன சொல்கிறதென்று பார்க்க வேண்டுமே அல்லாது, அந்தப் பெரியார் என்ன சொன்னார், இந்தப் பெரியார் என்ன சொன்னார் என்று பார்ப்பது மார்க்கமாகாது. இந்த எண்ணந்தான் முன்னோர்களைக் குருட்டுத்தனமாகப் பின்பற்றும் நிலையை உண்டாக்கி வழிகேட்டில் இட்டுச் சென்றது.

அதனால்தான் இறைவன் இணை வைப்பதற்கு, அடுத்த பெருங் குற்றமாக, முன்னோர்களைக் குருட்டுத்தனமாகப் பின் பற்றுவதைக் குறிப்பிடுகின்றான்.

இன்னும் சொல்லப் போனால், இதையும் தனக்கு இணை வைப்பதாகவே குறிப்பிடுகின்றான். "இவர்கள் அல்லாஹ்வை யன்றித் தங்கள் பாதிரிகளையும், சந்நியாசிகளையும் மர்யமுடைய மகன் மஸீகையும், (தங்கள்) தெய்வங்களாக எடுத்துக் கொண்டிருக்கின்றனர். எனினும். ஒரே ஆண்டவனைத்தவிர மற்றெவரையும் வணங்கக் கூடாதென்றே, இவர்கள் (யாவரும்) ஏவப்பட் டிருக்கின்றனர். அடிபணிவதற்குரிய நாயன், அவனையன்றி வேறெவனும் இல்லை. அவர்கள் இணைவைக்கும் இவற்றைவிட்டு அவன் மிகவும் பரிசுத்தமானவன்.

*அல்குர்ஆன் 9:31*

இந்த திருவசனம் இறங்கியபோது, கிறித்தவராக இருந்து, இஸ்லாத்தில் இணைந்த அதீ இப்னு ஹாத்தம்(ரழி) என்கிற நபித்தோழர், "அல்லாஹ்வின் தூதரே" நாங்கள் எங்கள் மத அறிஞர்களை வணங்கிக் கொண்டிருக்கவில்லையே! (ரப்புகளாக ஆக்கிவிட்டதாக இறைவன் கூறுகிறானே?) என்று நபி(ஸல்) அவர்களிடம் கேட்கிறார்கள். அதற்கு அவர்கள், "உங்கள் மத அறிஞர்கள் ஹலால் என்று கூறியவற்றை ஹலால் என்றும், ஹறாம் என்று கூறியவற்றை ஹறாம் என்றும் (ஆதாரம் பார்க்காமல், கண்ணை மூடிக்கொண்டு) நீங்கள் ஏற்றுக் கொண்டீர்களல்லவா? அதுதான் உங்கள் மத அறிஞர்களை ரப்புகளாக ஆக்கியது" என்று நபி(ஸல்) விளக்கம் தந்தார்கள். ஆதாரம் : அஹ்மத், திர்மிதி

இது கிறித்தவர்களைக் குறிப்பிட்டு இறைவன் கூறி இருந்தாலும், அவர்கள் எந்தக் குற்றத்திற்காக இறை வனுக்கு இணை வைத்ததாகக் குற்றம் சாட்டப்பட் டிருக்கிறார்களோ, அதே குற்றத்தை முஸ்லிம் மதவாதிகளும் செய்தால் அவர்களும் இணை வைத்தவர்களே ஆவார்கள். கிறித்தவர்கள் இறைவனுடைய சொல்லைவிட, தங்கள் பாதிரிமார்களின் சொல்லுக்கு முதன்மை கொடுத்தார்கள். அதனால் பாதிரிமார்களை இறைவன் ஆக்கிவிட்டதாக இறைவன் குற்றம் சாட்டுகின்றான். அப்படியே முஸ்லிம் மதவாதிகளும் இறைவனது சொல்லைவிட, பெரியார்கள் சொன்னதாக (இமாம்கள்) இறை நேசர்கள் சொன்னதாகச் சொல்லப்படும் சொல்லுக்கு முதன்மை கொடுத்தால், இவர்களும் தம் பெரியார்களையும், இறை நேசர்களையும் இறைவனாக ஆக்கிவிட்டதாக ஏன் கருதக்கூடாது? சினங்

கொள்ளாது சிந்திக்க வேண்டுகின்றேன்.

இவ்வாறு தங்கள் முன்னோர்கள் மீது குருட்டுத்தனமாக நம்பிக்கைக் கொண்டிருந்த, இறுதித் தூதரின் நெருங்கிய உறவினர்களையும், மார்க்கத்துக்காகப் பெரும் உதவி செய்தவர்களையும் கூட விட்டு விடவில்லை. அவர்களை மிகக் கடுமையாகத் தண்டித்தான் இறைவன்.

அபூலஹப் இறுதித் தூதரின் தகப்பனார் கூடப் பிறந்தவன். இறுதித் தூதர் பிறந்தவுடன், முதல் மீலாது கொண்டாடியவன் அபூலஹப்; இறுதித் தூதர் தனது பிறந்த தினத்தைக் கொண்டாட வில்லை. இன்று மீலாது கொண்டாடுவோர் அபூலஹபைப் பின்பற்றித்தான் மீலாது கொண்டாடுகிறார்கள். இறுதித் தூதர் மழலையாக இருக்கும் போது, அவர்களைக் கொஞ்சிக் குலாவி, மேனியெல்லாம் முத்தமிட்டு வளர்த்தவன் அபூலஹப். அவர்கள் மீது அளவு கடந்த அன்பைச் சொரிந்தவன் அபூலஹப். இறுதித் தூதரின் இரண்டு பெண் மக்களுக்குத் தன் இரண்டு ஆண் மக்களைக் கொடுத்து, இரட்டைச் சம்பந்தியாகிக் கொண்டவன் அபூலஹப். இறுதித் தூதருக்கு ஏற்படும் புகழைத் தனக்குக் கிடைத்ததாக எண்ணி மகிழ்ந்தவன் அபூலஹப். ஆனால் இறைவனால் அவன் சபிக்கப்பட்டான். அவனைச் சபித்தது குறித்த செய்தி இறுதி நெறிநூலில் ஒரு அத்தியாய மாகவே இருக்கிறது. (பார்க்க 111:1-5) இத்தனைச் சிறப்புக்களை உடையவன் சபிக்கப்பட்டதற்குக் காரணம்? காரணம் ஒன்றே. இறுதித் தூதர் தன் சகோதரன் மகன் என்பதற்காக இத்தனை உறவுகளை வைத்திருந்தான். இறைவன் ஒருவனை மட்டுமே வணங்க வேண்டும் என்று சொன்ன அளவில் வெகுண்டெழுந்தான். இறைவனையும் வணங்கிக் கொண்டு, அதே சமயத்தில் இறைத்தூதர்களையும், மஹான்களையும் சிலைகளாகவும் சமாதிகளாகவும் வடித்து, அவற்றிற்கும் மரியாதை செய்து கொண்டிருந்த தன் முன்னோர்களின் வழியைத்தான் அபூலஹப். சரி என்று கண்டான். தன் முன்னோர்களை விட, இந்த முஹம்மது அறிவாளியாகி விட்டாரா என்பதே அவனது சந்தேகம். இறுதித் தூதரைப் பார்த்து அவன் உதிர்த்த வாசகங்கள் இவைதாம்: **“இறைத்தூதர் இப்ராஹீம்(அலை) முதல் கொண்டு இஸ்மாயீல்(அலை) அவர்களுக்குப் பிறகு தோன்றிய பெரியார்கள். இறைநேசர்களாகிய**

**முன்னோர்கள், எல்லாம் வழிகேடர்களா? நரகவாசிகளா? இறைவனை, இறை கட்டளைகளை அறியாதவர்களா? அவர்களைவிட நீ அறிவாளியாக ஆகிவிட்டாயோ? நான் பார்க்கப் பிறந்தவன் நீ, நான் தூக்கி வளர்த்தவன் நீ, என்னைவிட தெரிந்து விட்டாயோ? எனக்கே அறிவுரை சொல்ல வந்து விட்டாயோ?"** என்றுதான் ஆத்திரத்துடன் கேட்டான். அபூலஹபுக்கு முன்னோர்களைக் குருட்டுத்தனமாகப் பின்பற்றும் கடும் பற்று இருந்ததே அல்லாமல், தான் பார்க்கப் பிறந்தவர், தான் தூக்கி வளர்த்தவர், தான் விரும்பி ஒன்றைச் சொல்லவில்லை; இறைவன் சொல்லச் சொல்லிக் கட்டளை யிட்டுள்ளதைச் சொல்கிறார் என்பதையும், தான் குருட்டுத்தனமாக முன்னோர்களைப் பின்பற்றி நடக்கும் கொள்கைகள், இப்ராஹீம்(அலை) இஸ்மாயீல்(அலை), உண்மையான பெரியார்கள், இறைநேசர்கள் போதித்த போதனைகள் அல்ல. மார்க்கத்தை வியாபாரப் பொருளாக்கியவர்களின் கட்டுக்கதைகளைத்தான், உண்மை என்று நம்பி செயல்பட்டு வருகிறோம் என்பதையும் அறியும் பற்று இல்லாமல் போய்விட்டது. இதனால் இறைவன் அபூலஹப் மீது கோபங்கொண்டு அவனைச் சபித்து ஒரு அத்தியாயத்தையே இறக்கினான் **(111:1-5)**. இந்த அபூலஹபைப் பின்பற்றி நடக்கக் கூடியவர்கள் இன்றும் மிகுதியாக இருக்கிறார்கள். அவர்கள் சிந்தித்து விளங்கித் திருந்த முன்வர வேண்டும். இல்லை என்றால் அபூலஹபின் கதி அவர்களுக்கும் ஏற்பட்டு விடுமோ என்று அஞ்சுகின்றேன்.

அடுத்து தகப்பனார் கூடப் பிறந்த இன்னொரு சகோதரர் அபூதாலிப் இறுதித் தூதருடனே இருந்தார். இருந்தது மட்டுமன்று. உறுதுணையாக, பாதுகாவலராக, குரைஷிகளை எதிர்க்கும் அரணாக, எல்லாவகைகளிலும் இறுதித் தூதருக்கு உதவி செய்து கொண்டிருந்தவர். ஒரே இறைவனை மட்டும் வணங்கும் அந்தப் போதனையால் ஏற்பட்ட இன்னல்கள், சிரமங்கள் அனைத்தையும் அவர் மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொண்டார். உண்மையான மார்க்கத்தை நிலைநாட்டும் பெரும்பணியில் அவருக்குப் பெரும் பங்கு உண்டு. இறுதித் தூதரிடம் தன் உயிரையே வைத்திருந்தார். அப்ரஹா இறை இல்லத்தைத் தகர்க்க வந்தபோது, இறை இல்லத்தை இறைவன் பாதுகாத்துக் கொள்வான் என்று சொல்லி,

இறைவனிடமிருந்த தன் நம்பிக்கையை வெளிப்படுத்தியவரின் மகன். ஆனால் இறுதிவரை உண்மையான மார்க்கத்தை ஏற்கும் பேறு அவருக்குக் கிட்டவில்லை. தனக்கு எல்லா வகைகளிலும் உதவி செய்த வளர்ப்புத் தந்தை, நரகிற்குப் போய்விடக் கூடாது. ஆதலால் அவரை எப்படியும் காப்பாற்றி விட வேண்டும் என்று இறுதித் தூதர் புழுவாகத் துடித்தார்கள்; கெஞ்சினார்கள்; கதறினார்கள். இறைவனிடம் மீண்டும் மீண்டும் முறையிட்டார்கள். இறுதித் தூதரின் துடிப்பில், கெஞ்சலில், கதறலில் இறைவன் இரக்கம் காட்டவில்லை. இத்தனைக்கும் இறைவனின் மிகவும் நேசத்திற்குரிய, பாசத்திற்குரிய இறுதித் தூதர். மாறாக, **“நீர் விரும்புகிறவர்களுக்கு நேர்வழிகாட்ட உம்மால் முடியாது. நான் யாருக்கு விரும்புகிறேனோ, அவர்களுக்கு மட்டுமே நேர்வழி காட்டுகிறேன்”** (28:56) என்று இறுதித் தூதருக்கு இறை வெளிப்பாடு வந்தது. ஆக உடல், பொருள், ஆவி அனைத்தையும் இஸ்லாத்திற்கே தத்தம் செய்து மார்க்கத்தை வளர்க்கத் துணைபுரிந்த அபூதாலிப் நேர்வழி பெறும் பாக்கியம் பெறவில்லை. ஆனால் வஹ்ஷி, ஹிந்தா போன்ற பெருங் குற்றவாளிகளெல்லாம் நேர்வழி பெறும் பாக்கியம் பெற்றனர். காரணம் அதேதான். ஆம். அபூத்தாலிபுக்குத் தனது முன்னோர்கள் மீதிருந்த குருட்டு நம்பிக்கைதான். இறுதித்தூதர் இறைவனை மட்டும் தெய்வமாக ஏற்றுக்கொள்ளுங்கள் என்று சொன்னபோது, அவர் உதிர்த்த வார்த்தைகள் இதை மெய்ப்பிக்கின்றன. அபூத்தாலிபுடைய வார்த்தைகள் இவை: **“நான் எனது தந்தை அப்துல் முத்தலிப் எந்த மதத்தில் இருந்தாரோ, அதே மதத்தில் இருக்க ஆசைப்படுகிறேன்.”** முன்னோர்களைக் குருட்டுத் தனமாகப் பின்பற்றுவோரின் கதி இதுவே தான் சகோதரர்களே. அவர்கள் இறைத் தூதர்களின் நெருங்கிய உறவினர்களாக இருந்தாலும் சரி, உண்மையான மார்க்கத்தின் வளர்ச்சிக்கு எல்லா வகைகளிலும் உதவி செய்தவர்களாக இருந்தாலும் சரி; இறைத் தூதர்களை உயிருக்குயிராக நேசிப்பவர்களாக இருந்தாலும் சரி; முன்னோர்களை, முன் சென்ற அறிஞர்களைக் குருட்டுத்தனமாகப் பின்பற்றுபவர்கள் நேர்வழி பெறமாட்டார்கள். இதில் ஐயமே யில்லை. மாறாக இறைவனது சாபத்திற்கும் தண்டனைக்கும் அவர்கள் ஆளாவார்கள்.

ஆகவே, மார்க்கம் இறுதி நெறிநூலையும், இறுதித்

தூதரின் போதனைகளையும் பின்பற்றி நடக்கக் கட்டளையிடுகிறதே அல்லாமல், குருட்டுத்தனமாக யாரையும் பின்பற்றச் சொல்லவில்லை. ஆதலால் உண்மையான இறைநம்பிக்கையாளன், **"இறை வசனங்களே ஓதிக் காட்டப்பட்டாலும் கண்மூடித் தனமாகப் பின்பற்ற மாட்டான். (சிந்தித்துச் செயல்படுவான்)"** என்று இறைவனே தனது இறுதி நெறிநூலின் புர்கான் என்ற 25ஆவது அத்தியாயத்தில் 73ஆவது வசனத்தில் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கும் போது, வேறு யாருடைய சொல்லைக் கண்மூடித்தனமாகப் பின்பற்ற முடியும்? என்பதை நீங்களே சிந்தித்து விளங்கிக் கொள்ளுங்கள். இறுதி நெறிநூலையும், இறுதித் தூதரின் போதனைகளையும் நேரடியாக விளங்கிச் செயல்படுபவன் மட்டுமே நேர்வழி நடப்பவ னாவான்.

மார்க்கத்தில் இடைத்தரகர்களுக்கு இடமே இல்லை. சாத்தான் வந்து புகுந்துவிட்டால் குழப்பம் ஏற்படுவதுபோல், இந்த இடைத்தரகர்கள் வந்து புகுந்துவிட்டால் மதங்கள் ஏற்பட்டுவிடும். மக்களால் இறுதி நெறிநூலையும், இறுதித் தூதரின் போதனைகளையும் விளங்கிக் கொள்ள முடியாது. நாங்கள் சொல்வதே இறைவாக்கு; இதை மக்கள் நம்புவது அவர்களது தலை எழுத்து என்று துணிந்து கூற இந்தத் தரகர்களுக்கு எப்படித்தான் துணிவு வந்ததோ? நாம் அறியோம்? இறுதி நெறிநூலையும், இறைத்தூதரின் போதனைகளையும் ஆராய்ந்தால், மார்க்கம் எளிதாக்கப்பட்டிருக்கிறது என்பது விளங்கும். இறுதி இறை வசனங்கள் மக்கள் அனைவரும் புரிந்து கொள்ளக் கூடிய வகையில் தான் இறக்கப்பட்டுள்ளன. இறுதித் தூதரின் போதனைகளும் மக்கள் விளங்க எளிதாகவே இருக்கின்றன என்ற உண்மையே வெளிப்படுகின்றது. இவர்கள் சொல்வதைப் பார்த்தால், இறைவனும் இறுதித் தூதரும் மக்களுக்கு மார்க்கத்தை எடுத்து விளக்க ஆற்றல் அற்றவர்களாகப் போய்விட்டார்கள் என்று தோன்றும். அந்தப் பெரிய கைங்கரியத்தை இவர்கள் செய்வதுபோல் அல்லவா எண்ணத் தோன்றுகின்றது? இது வியப்பாக இல்லை? இறைவனை உங்களால் நெருங்க முடியாது. இந்தச் சிலைகளுக்கும், சமாதிகளுக்கும் மரியாதை செய்தால், அவை உங்களை இறைவன்பால் நெருங்கச் செய்யும் (10:18, 39:3) என்று கூறி அன்றைய மக்களை வழி கெடுத்த அந்த அபூ ஜஹ்ல் கூட்டத்தாருக்கும்,

இறைவனது இறுதி நெறிநூலையும், இறுதித் தூதரின் போதனைகளையும் உங்களால் விளங்கிக் கொள்ள முடியாது. எங்களுக்கு மரியாதை செய்தால், நாங்கள் விளங்கச் செய்கிறோம் என்று கூறி இன்றைய மக்களை வழிகெடுக்கும் இந்தப் புரோகிதக் கூட்டத்தாருக்கும் வேறுபாடே தெரிய வில்லை. ஆதலால் என் முஸ்லிம் சகோதரர்களைப் பார்த்து நான் இரக்கப்படுகின்றேன்.

## டாக்டர் ஜூலியஸ் ஜெர்மான்ஸ் சொல்கிறார்

**"முஹம்மது (ஸல்) அவர்கள் புரோகிதத்தின் வசிகர வலையை 1400 ஆண்டுகளுக்கு முன்பே கிழித்தெறிந்து விட்டார்கள். அல்குர்ஆனின் ஞானபோதனைகள் மூலமே ஒவ்வொருவரும் இறைவனுடன் நேரடித்தொடர்பு கொள்ள உரிமை ஏற்பட்டுவிட்டது. இதன்மீது எந்தப் புரோகிதக் குழுவினரும் எப்படிப்பட்ட தடை உத்திரவையும் பயன்படுத்த வழி இல்லாமல் போய்விட்டது"** என்று டாக்டர் ஜூலியஸ் ஜெர்மான்ஸ் என்பவர் கூறுகிறார். கைசேதமே ஒரு முஸ்லிம் அல்லாதவர் இஸ்லாத்தையும், அல்குர்ஆனையும் விளங்கி வைத்திருக்கும் அளவுக்கு முஸ்லிம்கள் என்று சொல்லிக் கொள்பவர்கள் விளங்கிக் கொள்ளவில்லையே என்ற எண்ணம் ஏற்படுகிறது. இன்னும் முன்னோர்கள், முன் சென்ற அறிஞர்கள் சொன்னார்கள் என்று அவர்களது பெயரால், இறுதி நெறிநூலிற்கும் இறுதித் தூதரின் போதனைகளுக்கும் மாறாகச் சொல்லி வைக்கப்பட்டிருக்கும் கற்பனைக் கட்டுக் கதைகளை நம்பித்தானே செயல்பட் டுக் கொண்டிருக்கிறார்கள் என்று நான் வியப்படை கின்றேன். டாக்டர் சொல்வதைப் பாருங்கள். இறைவனுடன் நேரடித் தொடர்பு கொள்ள வழி ஏற்பட்டுவிட்டது என்று அவர் சொல்லவில்லை. உரிமை ஏற்பட்டுவிட்டது என்றே அவர் சொல்கிறார். தனக்குள்ள உரிமையைப் பற்றித் தெரியாதவர்களைக் குறித்து நாம் என்ன சொல்ல முடியும்?

## அறியாததை யாரிடம் கேட்டு அறிந்து கொள்வது?

**"நீங்கள் அறியாததை அறிந்தவர்களிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள்"** (பார்க்க 16:48, 21:7) என்று இறைவனே இறுதி நெறிநூலில் சொல்லியிருக்கிறானே

என்று மக்களைத் திசை திருப்புவார்கள். இங்கும் அவர்கள் மக்களை ஏமாற்றுகிறார்களே அல்லாமல், உண்மையைச் சொல்லவில்லை. இந்த வசனங்களில் '**அஹ்லத்திக்ரி**' என்று இறைவன் குறிப்பிடுகின்றானே அல்லாமல், '**அஹ்லல் இல்மி**' என்று குறிப்பிட்டவில்லை. அதாவது இறை அறிவிப்புகளை உடையவர்களிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள் என்று சொல்கிறான். ஆனால் அறிவுடையவர்களிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள் என்று சொல்லவில்லை. அப்படியானால் ஒருவர் ஒரு ஐயம் வந்து கேட்டால், இறைவன் தன் திருகுர்ஆனில் இவ்வாறு சொல்கிறான். அதற்கு இறுதித்தூதர் இவ்வாறு விளக்கம் கொடுத்தார்கள் என்றல்லவா விளக்கவேண்டும். இறுதிநெறிநூலையும் இறுதித் தூதரின் போதனைகளையும் விட்டுவிட்டு, அவர் சொன்னார் இவர் சொன்னார் என்று இவர்கள் கற்பனையில் வந்த கட்டுக் கதைகளையா சொல்வது? இப்படியா மக்களை ஏமாற்றுவது? மாணவனுக்கு ஒரு கணக்கில் ஐயம் வந்து ஆசிரியரிடம் கேட்டால், அதன் தொடக்கத்திலிருந்து அந்தக் கணக்கை எப்படிப் போடவேண்டும் என்று கற்றுக்கொடுப்பதா? அல்லது அதை எல்லாம் இருட்டடிப்புச் செய்துவிட்டு, இறுதியில் வரும் 12 அல்லது 10 என்ற விடையை மட்டும் சொல்லிக் கொடுப்பதா? எது அறிந்து கொள்ளச் செய்வது? நீங்களே சிந்தித்து ஒரு முடிவுக்கு வாருங்கள்.

## பரீட்சையில் காப்பியடிப்பது பெருங்குற்றம்

தேர்வில் மற்றவனைப் பார்த்து எழுதி வெற்றி பெறுவது ஒரு பக்கம் இருக்கட்டும். காப்பி அடித்ததற்காகத் தண்டிக்கப் படுவான். உலகம் இறைவனால் அமைக்கப்பட்ட தேர்வுக்கூடம். இதை இறைவனே இறுதி நெறிநூலில் (67:2) கூறுகிறான். இந்தத் தேர்வில் இறுதி நெறிநூலையும், இறுதித் தூதரின் போதனைகளையும் தானே படித்து விளங்கிக் கொண்டு தேர்வு எழுதாமல், மற்றவர்களைக் காப்பி அடிப்பவன் நிலை என்ன ஆகும்? இறைவனிடம் பாஸ் மார்க் கிடைக்குமா? இதனை உங்கள் சிந்தனைக்கே விட்டு விடுகின்றேன். ஆக இறுதி நெறிநூலையும், இறுதித் தூதரின் போதனைகளையும் படித்து விளங்கிக் கொண்டு செயல்படுபவனே,

இறைவனால் சம்மதிக்கப்பட்ட மார்க்கத்தைப் பின்பற்று கின்றான். **"எனக்குப் பின்னால் இரண்டை விட்டுச் செல்கிறேன். அவற்றை நீங்கள் பற்றிப் பிடித்துக் கொண்டிருக்கும் காலமெல்லாம் நீங்கள் வழி தவறவேமாட் டீர்கள், அவை இறுதி நெறிநூலும் எனது போதனை களும் ஆகும் என்றுதான் இறுதித்தூதர் சொன்னார் களேயல்லாமல், எனக்குப் பின்னால் நான்கு இமாம்களை விட்டுச்செல்கிறேன், அவர்களைப்பற்றிப் பிடித்துக் கொண்டிருக்கும் காலமெல்லாம், நீங்கள் வழி தவறவே மாட்டீர்கள்"**, என்று சொல்லவில்லையே. உறுதியாகச் சொல்லவில்லை.

**"ஒவ்வொரு முஸ்லிமின்மீதும் மார்க்கத்தைக் கற்றுக்கொள்வது கண்டிப்பான கடமை"** என்று இறுதித்தூதர் சொல்லும்போது, அன்று இருந்தது இறுதி நெறிநூலும், இறுதித்தூதரின் போதனைகளுமே ஆகும். உறுதியாக வேறெதுவும் இல்லை. அப்படியானால் இறுதி நெறிநூலையும், இறுதித் தூதரின் போதனைகளையும் மட்டும்தான் ஒவ்வொரு ஆணும், பெண்ணும் கற்றுக் கொள்வதைக் கடமையாக்கி இருக்கிறார்கள், இறுதித் தூதர் முஹம்மது(ஸல்) அவர்கள் என்பது உறுதிப் படுகிறது.

இன்னொரு பெரிய தவற்றையும், இந்த மதவாதிகள் செய்கிறார்கள். ஒருவர் படித்துப் பட்டம் பெற்று, அவர் பெயருக்கு முன்னாலும், பின்னாலும் நீண்ட பட்டங்களை இணைத்துக் கொண்டவராகவும், தோற்றத்தில் பெரியவர் போலக் காட்சி தந்தாலும், அவரைத் தங்கள் வழி காட் டியாகக் கண்ணை மூடிக்கொண்டு ஏற்றுக்கொள்கிறார் கள். அவர் எதைச் சொன்னாலும், அவர் படித்தவர், தவறாகவா சொல்வார் என்று குருட்டுத்தனமாகப் பின் பற்றுகிறார்கள். அவர் இறுதி நெறிநூலுக்கும், இறுதித் தூதரின் போதனைக்கும் மாற்றமாக உபதேசித்த போதிலும் அதனை ஏற்றுக் கொள்கிறார்கள்.

இவர்களுடைய எண்ணத்தில் இறை வசனங்களை விட இறுதித்தூதரின் போதனைகளைவிட இவர்கள் நம்பும் இந்த வழி காட்டியின் சொல் மிகமிக முதன்மை வாய்ந்த தாக ஆகிவிடுகின்றது. அவர் இவர்களால் செய்ய முடியாத ஒரு வியத்தகு செயலைச் செய்து காட்டி விட் டால் போதும். வேறு வினையே வேண்டாம். அவரையே

இறைவனாகவும், அவர் சொல்வதையே இறைவாக்காக வும் எடுத்துக் கொள்வார்கள்.

இறைவனின் இறுதி நெறிநூலைவிட, இறுதித் தூதரின் போதனைகளைவிடப் பலமடங்கு மதிப்புள்ளதாக, இந்த மனிதரின் வாக்கு, இந்த மதவாதிகளிடம் ஆகிவிடு கின்றது. அதற்கு நேர்மாறாக ஒரு சாதாரணமான ஒருவர், தன் சொந்தக் கருத்தைச் சொல்லாமல், இறைவனின் குர்ஆன் வசனங்களிலிருந்தும், இறுதித் தூதரின் போதனைகளிலிருந்தும் எடுத்துக் காட்டினாலும், உடனே இந்த மதவாதிகள் அவரைப் பார்த்து, நீ ரொம்பப் படித்துவிட்டாயோ? நிரம்பத் தெரிந்து கொண்டாயோ? என்று அவரை மட்டந்தட்டி, அவரது பேச்சை அல்ல, இறை வசனங்களையும், இறுதித்தூதரின் போதனை களையும் மறுத்து ஒதுக்கி விடுகிறார்கள். என்னே அவர்களின் இரங்கத்தக்க நிலை? இவர்கள் சொர்க்கம் சேர முடியுமா? எண்ணிப் பாருங்கள்.

## மார்க்கத்தின் தெளிவான முடிவ. இதுதான்!

மார்க்கத்தில் சொந்தக் கருத்துச் சொல்லப் படித்தவருக்கும் உரிமை இல்லை; படிக்காதவருக்கும் உரிமை இல்லை. அனைவரும் இறுதி நெறிநூலிலும், இறுதித்தூதரின் போதனைகளிலும் உள்ளவற்றை எடுத்துப் பறை சாற்றும் உரிமை பெற்றவர்கள் மாத்திரமே. அரசு உத்திரவை பறை சாற்றுவதற்குத் தகுதி என்ன இருக்கிறது? தாழ்த்தப்பட்ட வகுப்பிலிருந்து (இஸ்லாத்தில் தாழ்த்தப்பட்டவர்கள் இல்லவே இல்லை) தேர்ந்தெடுக்கப் படுகிறான். உரத்த குரல் வேண்டும், அரசு சொல்லியதைத் தெரிந்து அப்படியே உரக்கச் சொல்ல வேண்டும்.

கூடக்குறையச் சொல்லவோ, அவன் கருத்தை அதில் இணைக்கவோ அவனுக்கு உரிமை இல்லை. அப்படிச் செய்தால் அவன் தண்டிக்கப்படுவான். இதே நிலைதான் மார்க்கத்தை உபதேசிப்பவனுக்கும். இறைவனும், இறுதித் தூதரும் சொல்லியுள்ளவற்றைத் தெரிந்து கொள்ள வேண்டும்; அதை அப்படியே மக்களுக்குச் சொல்ல வேண்டும். இதைச் சிறுவன் செய்தாலும் சரி; படித்தவன் செய்தாலும் சரி; படிக்காதவன் செய்தாலும் சரி; அறிஞன் செய்தாலும் சரி; மடையன் செய்தாலும் சரி; சொல்லுவது இறைவசன

மாகவோ, இறைத்தூதரின் போதனையாகவோ இருந்தால், மக்கள் உடனே ஏற்றுக்கொள்ள வேண்டும். அதற்கு மாற்றமாக இருந்தால் அதனை ஏற்காது ஒதுக்கித் தள்ள வேண்டும்.

சொல்பவனைப்பற்றி நமக்கு அக்கறை இல்லை. அவன் சொல்லக்கூடியது இறுதி நெறிநூலில் உள்ளதா? இறுதி நபியின் போதனையில் உள்ளதா? அல்லது அவை இரண்டிற்கும் ஒத்ததாக இருக்கிறதா? என்று மட்டுமே பார்க்க வேண்டும். இந்தக் கண்ணோட்டத்தில் மார்க்கத்தை அணுகினால் சிக்கல் எழாது; கருத்து வேறுபாடுகள் எழாது; பிளவுகள் எழாது; மதப்பிரிவுகள் உண்டாகாது; இறைவனே வழி காட்ட வேண்டும்.

இந்தக் கருத்தில் நான் இவ்வளவு வலியுறுத்திக் கூறுவது உங்களுக்கு வியப்பாக இருக்கலாம். காரணம் முஸ்லிம் மதவாதிகள், இஸ்லாத்தில் தங்கள் விருப்பப்படி எல்லாம் கூடக்குறையச் செய்து கொண்டதால், உலகில் மார்க்ஸ், ரஸ்ஸல், லெனின், பெரியார், அண்ணா போன்ற பேரறிஞர்களாக எண்ணப்பட்டவர்களெல்லாம், இந்த மதவாதிகள் காட்டும் இஸ்லாத்தைப் பார்த்து விட்டு, இதுவும் மற்ற மதங்களைப் போன்றதுதான் என்று முடிவுக்கு வந்து, இறுதியில் இறைவனும் மறுமையும் இல்லை என்ற நாத்திக முடிவுக்கு வந்து கொண்டிருக்கிறார்கள். மற்ற மதவாதிகள் இஸ்லாத்தை ஆராயப் புகும்போது, இந்த முஸ்லிம் மதவாதிகளின் மதங்கொண்ட நிலைகண்டு மிரண்டோடுகிறார்கள். இறைவனது நேரான மார்க்கத்திற்கு வரவிரும்புவோரெல்லாம் மிரண்டோடுகிறார்கள். சாதாரண மக்கள் ஓடிவிட்டால் பரவாயில்லை. பெரிய பெரிய அறிஞர்கள் எல்லாம் ஓடுகிறார்கள். ஆக இஸ்லாத்தைப் பற்றி ஒரு பெரிய தவறான எண்ணம், மாற்று மத சகோதரர்களிடம் ஏற்பட்டுள்ளது. ஆகவே அந்த அறிஞர்களுக்கும், சகோதரர்களுக்கும் உண்மையான நேரான இஸ்லாம் மார்க்கம் இதுதான் என்பதைப் புலப்படுத்தவே இந்த அளவிற்கு முற்பட்டேன். யாருடைய உள்ளத்தையும் புண்படுத்த வேண்டும் என்பது எனது நோக்கமன்று. ஆனால் உண்மை எப்போதும் கசப்பானதே. அதனால் பூமி உருண்டை என்று எடுத்துச் சொன்னவர் கொல்லப்பட்டார். உண்மை நிலைகளை எல்லாம் எடுத்துச் சொன்னவர்கள் அனைவரும் மக்களால் சித்திரவதைக்

குள்ளாக்கப்பட்டிருக்கிறார்கள். என்றாலும் உண்மைகளைச் சொல்லாமல் மறைக்க முடியாதல்லவா? இறைவனுக்குப் பதில் சொல்ல வேண்டுமல்லவா?

எனது உரையை முடிவுக்குக் கொண்டு வருமுன் ஒருசில வார்த்தைகள் சொல்ல வேண்டும். எனது இந்தப் பேச்சை புரிந்துகொள்ள யாருக்கு முடிகிறதோ, அவர்கள் மட்டும் சிந்தித்து விளங்கிச் செயல்படவும். அதுவும் இறுதி நெறிநூலிற்கும், இறுதித் தூதரின் போதனைக்கும் ஒத்ததாக இருந்தால் மட்டும் ஏற்றுக் கொள்ளவும். மாற்றமாகப்பட்டால் ஒதுக்கி விடவும் வேண்டும்; மார்க்கத்தில் அவர்கள் விருப்பப்பட்டதை எல்லாம் சொல்ல உரிமை இல்லை. யாருக்குப் புரியவில்லையோ, அவர்கள் பாதையிலேயே சென்று கொண்டிருக்கலாம். அவர்கள் பாதையில் நாம் குறுக்கிடப் போவது இல்லை. மார்க்கத்தில் பலவந்தமில்லை என்று இறைவனே கூறுகிறான்.

தகப்பன் தான் பெற்று வளர்த்த மகனைக்கூடப் பலவந்தமாக சாந்தி (இஸ்லாம்) மார்க்கத்தில் இணைக்க இறைவன் அனுமதிதரவில்லை. (பார்க்க 2:256, 18:29)

அவர்கள் நம்மீது சினங்கொள்ள வேண்டியதும் இல்லை, அவர்கள் வழி அவர்களுக்கு. நம் வழி நமக்கு அவ்வளவே (பார்க்க 109:1-6)

**முடிவுரை :**

அன்பர்களே! எனது பேச்சின் சுருக்கம் இதுவே **"ஒன்றே குலம் ஒருவனே தேவன்"** இதுவே நம் முதுமொழி. இறைவனை ஒருவனாக ஏற்றிருந்த நாம், மதவாதிகளின் மாயையில் சிக்கி, இறைத்தூதர்களையும், மஹான்களையும் அவதாரமாக்கிப் பின்னர் சாமிகளாக்கிப் பல தெய்வ வழிபாட்டிற்கு, வழி விலகிச் சென்று விட்டோம். விலகிச் சென்ற பாதையிலிருந்து, நேர்வழிக்கு உங்களை அழைக்கிறேன். ஒன்றே இறை; ஒன்றே நெறிநூல்; ஒன்றே குலம்; ஒன்றே மார்க்கம் என்ற தாரக மந்திரத்தை நாமெல்லாம் ஏற்று உலக அமைதியைக் காக்க வழி வகுப்போம் என்று அறை கூவி அழைக்கிறேன்.

இறைவனால் பெயரிடப்பட்டு. கொடுக்கப்பட்டு, ஆதமால்(அலை) அமுல் நடத்தப்பட்டு, ஆப்ரஹாம்(அலை) அவர்களால் நெறிப்படுத்தப்பட்டு, யாகூப்(அலை), ஜோசப்

(அலை), மோசஸ்(அலை), ஜீஸஸ்(அலை) முஹம்மது(ஸல்) ஆகியோரால் போதிக்கப்பட்ட சாந்தி (இஸ்லாம்) மார்க்கத்தின்பால் அழைக்கிறேன்.

மதவெறி கொண்டு இவ்வாறு சொல்வதாக நீங்கள் நினைக்க வேண்டாம். நான் மதவாதி அல்லவே. எப்படி எனக்கு மதவெறி வரமுடியும்? ஆனால் என்னைப்படைத்த இறைவன் என்னிடமிருந்து எதை விரும்புகிறானோ அதையே சொல்கிறேன்.

## இறை விருப்பம், இல்லை கட்டளை!

இது எனது சொந்த விருப்பமோ, உலகில் தோன்றிய இறைத்தூதர்களின் சொந்த விருப்பமோ அன்று. என்னையும், உங்களையும் படைத்துக் காத்து, வளர்த்து வரும் ஒரே இறைவனின் விருப்பம். நம் எஜமானனாகிய இறைவன், அவனது அடிமைகளாகிய நமக்கிட்டிருக்கும், மீற முடியாத கட்டளையாகும். ஆம்! நாம் அவனது அடிமைகளே. எஜமானனின் கட்டளையை, ஊழியன் அல்ல, அடிமை மீற முடியுமா? மாற்ற முடியுமா? சிந்தனை செய்யுங்கள்.

## ஆட்சியை மீற முடிகின்றதா?

மனித ஆட்சி, நாம் முயன்றால் அந்த ஆட்சியையே மாற்றி அமைத்துவிடலாம். அந்த ஆட்சியைத் தானும் மீற முடிகின்றதா? எந்த அளவு அஞ்சி, அஞ்சி நடக்கிறோம். பலவரிகளைக் கட்டுகிறோமே? பல நிபந்தனைகளுக்கு உட்பட்டு நடக்கிறோமே? இவற்றை எல்லாம் சரி என்று கண்டா, வரிகளைக் கட்டுகிறோம், நிபந்தனைகளுக்குக் கட்டுப்படுகிறோம், அவ்வளவே.

இல்லை என்றால் சரி காணாவிட்டால் மீறத்தான் முடியுமா? அரசு தண்டனைக்கு அஞ்சி, ஏற்று நடக்கவில்லையா? நம்மால் மாற்றி அமைக்க முடிந்த இந்த ஆட்சிக்கே இந்த அளவு அஞ்சுகிறோம். ஆயினும் மாற்று வழிகள் பல உண்டு. ஆட்சியை மாற்றலாம். அல்லது வேறு மாநிலத்திற்குச் சென்றுவிடலாம். இல்லை வேறு நாட்டுக்கே சென்று விடலாம், இல்லை, திறமை இருந்தால் சந்திர மண்டலத்திற்கே சென்று நமக்கென்று நாமே ஒரு ஆட்சி அமைத்துக் கொண்டு நம் விருப்பப்படி வாழலாம். இது சாத்தியமாகலாம். ஆனால் ஆட்சிகளுக்கெல்லாம் பெரிய ஆட்சி, இறையாட்சி. இறை

ஆட்சியை விட்டு வேறு ஆட்சியைத் தேர்ந்தெடுக்க முடியுமா? இறைவனை விட்டால் வேறு புகல் நமக்கு உண்டா? இறைவனது காற்றைச் சுவாசித்துக் கொண்டு, அவனது வானத்திற்குக் கீழ் இருந்து கொண்டு, அவனது பூமியிலே உலாவிக் கொண்டு, அவனது உணவுகளை உண்டு கொண்டு அவனுக்கு மட்டுமே சொந்தமான அனைத்தையும் அனுபவித்துக்கொண்டு அந்த ஒரே இறைவனுடைய கட்டளைக்கு மாறாக நாம் நடந்தால், நடக்க முற்பட்டால், அதன் விளைவு என்னாகும்? எப்படிப்பட்ட விபரீத விளைவுகளை நாம் சந்திக்க நேரிடும் என்பதை நீங்களே சிந்தித்துக் கொள்ளுங்கள். மனமிருந்தால் மார்க்கம் உண்டு. வாழ்வில் வெற்றிபெற வழியுண்டு. ஐயமே வேண்டாம்.

இறைக்கட்டளையை, மகத்தான வெற்றிக்குரிய வழியை உரிய ஆதாரங்களோடு எடுத்துச் சொல்லும், என்னை மதவெறியன், அமைதியைக் கெடுப்பவன் என்று சொன்னால், முறை தவறிய சிகிச்சையினால் நோய் முற்றிக் கடுந்துன்பத்தை அனுபவித்துக் கொண்டிருக்கும் ஒருவருக்கு, முறையான சிகிச்சையைச் சொல்லும் ஒருவரைப்பற்றி என்ன சொல்வது? முறை தவறி வியாபாரம் அல்லது தொழில் செய்து, பெரும் இழப்பை அடைந்துகொண்டிருக்கும் ஒருவருக்கு முறையாக வியாபாரம் செய்து, இலாபம் ஈட்டும் இரகசியத்தை எடுத்துச் சொல்லும் ஒருவரைப்பற்றி என்ன சொல்வது? அரசு உத்தரவை அறியாது அல்லது அஜாக்கிரதையாகத் தவறாகப் புரிந்து கொண்டு செயல்படுவதால், பெருந் தண்டனைக்கு ஆளாக இருக்கும் ஒருவருக்கு அரசு ஆணையைத் தெளிவுபடுத்தி, அந்த ஆபத்திலிருந்து காப்பாற்றும் ஒருவரைப் பற்றி என்ன சொல்வது? சிந்தித்து விளங்கிக்கொள்ள வேண்டுகின்றேன்.

## உலக அமைதிக்காக முன்வாருங்கள்

தேச துவேஷம், மாநில துவேஷம், இன துவேஷம், மத துவேஷம், மொழி துவேஷம் இப்படிப் பல துவேஷ நிலை மாறி அவை அனைத்தும் கடும் வெறியாக முற்றி, ஒருவரோடொருவர் போட்டி போட்டுக் கொண்டு, உலகிற்கே அழிவு தரும் அணு ஆயுதங்களைக் குவிப்பதில் முனைந் திருக்கக் கூடிய மக்களுக்கு நடுவே அமைதி காக்க, அறிஞர்கள் பல திட்டங்களைத் தீட்டிக்கொண் டிருக்

கிறார்கள். ஆனால் அவர்கள் திட்டம் மனிதத் திட்டம், மனிதத் திட்டம் மனித வெற்றிக்கு ஒருபோதும் வழி வகுக்காது என்பதை முன்பே பார்த்தோம். மக்களால் பேரறிஞர் என்று போற்றப் பட்ட பெர்னாட்ஷா, 1400 ஆண்டுகளுக்கு முன் பிறந்த முஹம்மது(ஸல்) அவர்கள் இன்று இருந்தால், இன்று உலகிற்கு மிக மிகத் தேவைப் படும் அமைதியை நிலை நாட்டி விடுவார் என்று ஒருபடி முன்னால் சென்று சொன்னார்; சாத்தியமில்லாத ஒன்றனையே கற்பனையாகச் சொன்னார். சாத்தியமான ஒன்றனையே நான் இப்போது உங்களுக்குச் சொல்லு கிறேன். உலகில் அறிஞர் பெருமக்களுக்கும் சொல்லு கின்றேன். 1400 ஆண்டுகளுக்கு முன்னே தோன்றிய முஹம்மது(ஸல்) அவர்கள் இன்று தோன்றப்போவ தில்லை. ஆனால் அவர்கள் வாயிலாக மனிதனுக்கு இறைவன் கொடுத்த திட்டம், வாழ்க்கை நெறி ஒரு புள்ளி கூட மாறுதல் இல்லாத நிலையில், இன்றும் நம்மிடம் இருக்கிறது. அறிஞர்களாகிய நீங்கள் அந்த இறைத் திட்டத்தை ஏற்று, உலகில் செயல்பட முன் வந்து விட்டால், உறுதியாகச் சொல்லுகிறேன், சத்தியமிட் டுச் சொல்லுகிறேன், உலகிற்கு இன்று மிக மிகத் தேவைப்படும் நலமும், அமைதியும், மகிழ்ச்சியும், அதிசயமோ என்று நீங்களே வியக்கத்தக்க வகையில் ஏற்பட்டுவிடும். செய்வீர்களா?

நானும், நீங்களும் முழுமையாக நம்பும் அந்த ஒரே இறைவன், அவனது திட்டத்தை ஏற்று நடக்கும் பேற்றை நம்மனைவருக்கும் கொடுத் தருள்வானாக ஆமீன்.

**நன்றி**

இந்த நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்து தந்த, பல்சமய உரையாடற் குழுவிற்கும், இடமளித்த தூய சின்னப்பர் இறையியல் கல்லூரிக்கும் பொறுமையாகக் கேட்டுக் கொண்டிருந்த உங்கள் அனைவருக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இறைவனின் சாந்தி உலகெல்லாம் உண்டாவதாக. எல்லாம் வல்ல இறைவனுக்கே அனைத்துப் புகழும், நன்றியும் உரித்தாகுக.